بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 7 | இதழ் 40

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - ரபீயுல்அவ்வல் 09 ★ அபா 06 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 06 அக்டோபர் 2022

## அல்லாஹ்வின் கட்டளை

وَرَحۡمَتِیۡ وَسِعَتۡ کُلَّ شَیۡءٍ ؕ
فَسَاَکۡتُبُہَا لِلَّذِیۡنَ یَتَّقُوۡنَ
وَیُؤۡتُوۡنَ الزَّکٰوۃَ وَالَّذِیۡنَ
ہُمۡ بِاٰیٰتِنَا یُؤۡمِنُوۡنَ

**பொருள் :**
என் கருணை எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது. எனவே இறையச்சத்தை மேற்கொண்டு ஸகாத் கொடுப்போருக்கும், மேலும் நம் வசனங்கள் மீது நம்பிக்கை கொள்வோருக்கும் நான் அதனைக் கட்டாயம் எழுதுவேன் எனக் கூறினான்.
(அல் அஃராஃப் : 157)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**சிலுவைக் கொள்கையின் உண்மை நிலையை தெளிவாக எடுத்துரைத்து, சிலுவையை முறிக்கக்கூடிய ஒருவர் தமது உம்மத்திலிருந்து தோன்றுவார். அதே அடிப்படையில் அவர் மஸீஹ் இப்னு மர்யமாக இருப்பார். மேலும் உட்பூசல்களை நீக்கி, முஸ்லிம்களை ஹிதாயத்திற்கான உண்மையான வழியில் நிலை நிறுத்துவார். எனவே அவர் மஹ்தி என்றழைக்கப்படுவார் என்ற நற்செய்தி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு கிடைத்திருந்தது.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இறுதிக் காலத்தைக் குறித்து, அந்நேரத்தில் இரண்டு வகையிலான குழப்பங்கள் தோன்றும். ஒன்று, உட்புற (குழப்பங்கள்)மற்றொன்று வெளிப்புற (குழப்பங்கள்) என்று செய்தி வழங்கியிருந்தார்கள்.

உட்புற குழப்பங்கள் இவ்வாறு இருக்கும். அதாவது, முஸ்லிம்கள் உண்மையான ஹிதாயத்தில் நிலைத்திருக்க மாட்டார்கள். மேலும், அவர்கள் ஷய்த்தானிய அமல்கள் மற்றும் தாக்கத்தின் கீழ் சென்றுவிடுவர். சூதாட்டம், மது அருந்துதல், மற்றும் எல்லா வகையான தீமையான செயல்களிலும் ஈடுபட்டு அல்லாஹ் வரையறுத்த எல்லைகளிலிருந்து வெளியேறிவிடுவர். மேலும், இறைவன் விதித்த தடைகளை பொருட்படுத்த மாட்டார்கள். தொழுகை மற்றும் நோன்பை கைவிட்டுவிடுவர். இறைக் கட்டளைகள் அவமரியாதை செய்யப்படும். திருக்குர்ஆன் கட்டளைகள் எள்ளி நகையாடப்படும்.

வெளிப்புற குழப்பங்கள் இவ்வாறு இருக்கும்: அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கையின் மீது இட்டுக்கட்டப்படும். இதயத்தை புண்படுத்தும் எல்லா வகையான தாக்குதல்களால் இஸ்லாத்தை இழிவுபடுத்துவதற்கும், அழிப்பதற்கும் முயற்சி செய்யப்படும். ஈஸா மஸீஹை இறைத் தன்மைக் கொண்டவராக ஒப்புக் கொள்ளச் செய்வதற்கும், அவரது சாபத்திற்குரிய சிலுவையின் மீது ஈமான் கொள்ளச் செய்வதற்காகவும் எல்லா வகையான வஞ்சகமும், திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

சுருக்கமாக, இந்த இருவகையான உட்புற மற்றும் வெளிப்புற மாபெரும் குழப்பங்களைப் பற்றிய தகவல் கொடுக்கும்போது, அத்துடன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இந்த நற்செய்தியும் கிடைத்துள்ளது.

அதாவது, சிலுவைக் கொள்கையின் உண்மை நிலையை தெளிவாக எடுத்துரைத்து, சிலுவையை முறிக்கக்கூடிய ஒருவர் அன்னார் (ஸல்) அவர்களின் உம்மத்திலிருந்து தோன்றுவார். அதே அடிப்படையில் அவர் மஸீஹ் இப்னு மர்யமாக

இதன் தொடர்ச்சி : 12ம் பக்கம்

**இறைவன் எந்த பொருட்களை ஹலால் ஆக்கியுள்ளானோ அவற்றையே நாம் ஹலால் என்று கூற முடியும். மேலும் எவற்றை ஹராம் என்று கூறியுள்ளானோ, அவற்றையே நாம் ஹராம் என்று கூறமுடியும்.**

اِنَّمَا حَرَّمَ عَلَیۡکُمُ الۡمَیۡتَۃَ
وَالدَّمَ وَلَحۡمَ الۡخِنۡزِیۡرِ وَمَاۤ اُہِلَّ لِغَیۡرِ اللّٰہِ بِہٖ ۚ
فَمَنِ اضۡطُرَّ غَیۡرَ بَاغٍ وَّلَا عَادٍ فَاِنَّ اللّٰہَ غَفُوۡرٌ رَّحِیۡمٌ

பொருள்: தானாகச் செத்ததையும், இரத்தத்தையும், பன்றி இறைச்சியையும், அல்லாஹ் அல்லாத வேறு பெயர் கூறப்பட்ட பொருள்களையுமே அவன் உங்களுக்கு விலக்கியுள்ளான். ஆனால், (ஷரீஅத்திற்கு) முரண்பட்ட எண்ணமில்லாமலும், வரம்புகளை மீறுவதற்கான எண்ணம் இல்லாத நிலையிலும் (அவற்றுள் ஏதாவது பொருளை உண்பதற்குக்) கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டால், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன் மேலும் கருணை காட்டுபவனுமாவான் (என்பதை நினைவில் கொள்க). (அந்நஹ்ல்:116)

இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த வசனத்தில் ஒரு மிகப் பெரிய கேள்வி எழுகின்றது. அதாவது ,இதில் நான்கு பொருட்கள் ஹராமாக்கப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இந்த நான்கு பொருட்கள் மட்டுமே ஹராமா? மேலும் இதை தவிர்த்து வேறு எந்த பொருளும் ஹராம் கிடையாதா? என்பதே அந்தக் கேள்வி.

இந்த பொருட்கள் மட்டுமே ஹராம் ஆகும் என்று கூறிய நபர்களின் கூற்றை பொருத்தவரை எனது கருத்தின்படி அவர்களின் விஷயம் சரியானதாகும். ஏனெனில் அதைத் தவிர வேறு எந்த பொருளும் இந்த வசனத்திற்குக் கொடுக்க முடியாது. இவ்வாறான கருத்துக் கொண்ட மக்களில் ஒருவர் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னார் தொடர்பாக புகாரியில் ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் அவர்களின் ஓர் அறிவிப்பு வருகின்றது. அதாவது, இந்த வசனத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள நான்கு பொருட்களே ஹராம் ஆகும் என்பது அன்னாரின் கருத்தாக இருந்தது.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 3, ரூஹுல் மஆனி தொகுதி 8)

மேலும், அபூதாவூதின் அறிவிப்பு உள்ளது. அதாவது, இப்னு உமர் (ரலி) அவர்களின் கருத்தும்

இதன் தொடர்ச்சி : 12ம் பக்கம்

## நபிமொழி

**விற்பனை செய்வதற்காக கால்நடையின் மடியில் பாலை தடுத்து நிறுத்துதல்**

(2151) : ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மடி கனக்கச் செய்யப்பட்ட ஆட்டை வாங்கிய நபர் அதில் பால் கறந்து கொள்ளட்டும். அவர் அதனை விரும்பினால் அதனை வைத்துக் கொள்ளட்டும். அவருக்கு அது (ஆடு) விருப்பமில்லையென்றால் (கறந்த) அந்த பாலுக்கு பகரமாக ஒரு ஸாஃ (அளவு) பேரீத்தம் பழம் கொடுக்க வேண்டும்.

**தொழுகையை அழகுபடுத்தி தொழுவதற்கான பைஅத்**

(2157) : கைஸ் (பின் அபீ ஹாஸிம்) அவர்களிடமிருந்து இஸ்மாயீல் அறிவிக்கின்றார்கள். மேலும் கூறினார்கள்:

நான் ஹஸ்ரத் ஜரீர் (ரலி) அவர்களிடமிருந்து கேட்டேன். அன்னார் (ரலி) இவ்வாறு கூறிவந்தார்கள்:

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவருமில்லை: முஹம்மது (ஸல்) அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள்: மேலும், தொழுகையை அழகுபடுத்தி தொழுதல், ஸகாத் கொடுப்பேன், (அல்லாஹ்வின் தூதரின் எல்லா கட்டளைகளையும்) செவி மடுப்பேன், மேலும் கட்டுப்படுவேன், எல்லா முஸ்லிம்களுக்கும் நன்மையை விரும்புவேன் ஆகிய விஷயங்களை நான் ஒப்புக் கொண்டு இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் நான் பைஅத் செய்தேன்.

(ஸஹீஹ் புகாரி-தொகுதி 4, பாடம் வியாபாரம், காதியான் பதிப்பு 2008)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் அருளுக்குரிய காலகட்டத்தில் நடைபெற்ற கடைசி போர், அதாவது டமாஸ்கஸ் வெற்றியைப் பற்றிய விளக்கமான குறிப்புகள்**

**டமாஸ்கஸ் வெற்றியை சில வரலாற்று ஆசிரியர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் நிகழ்ந்ததாக எடுத்துரைக்கின்றனர். ஆனால், டமாஸ்கஸ் போர் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்திலேயே தொடங்கியிருந்தது. ஆயினும், வெற்றியின் செய்தி மதீனாவை வந்தடைந்தபோது அந்நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் மரணம் நிகழ்ந்துவிட்டது.**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 02 செப்டம்பர் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு தபூக் மாதம் **02ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَ رَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் நடைபெற்ற போர்களைக் குறித்து கூறப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த வகையில், ஹிஜ்ரி 13ஆம் ஆண்டில் கிடைத்த டமாஸ்களின் வெற்றிக் குறித்து நான் சில விளக்கங்களை எடுத்துரைக்க விரும்புகிறேன். இது ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் நடைபெற்ற கடைசிப் போராக இருந்தது. டமாஸ்களின் இருப்பிடம் மற்றும் அமைப்பு தொடர்பாக வருகிறது:

அதாவது, இந்த புராதன டமாஸ்கஸ் சிரியாவின் தலைநகரமாகவும், வரலாற்று மரபுகளைக் கொண்ட நகரமாகவும் இருந்தது. தொடக்க காலத்தில், இது சிலை வணக்கத்தின் மாபெரும் தலைமையகமாக இருந்தது. ஆனால், கிறிஸ்தவம் வந்தபோது அந்த சிலைகள் இருந்த இடங்கள் தேவாலயங்களாக மாற்றப்பட்டன. இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த வணிக தலைமையகமாக இருந்தது. இங்கு அரேபியர்களும் குடியேறி இருந்தனர். மேலும் முஸ்லிம்களின் வணிகக் குழுக்களும் இங்கு வந்து கொண்டிருந்தனர். மேலும், இதன் காரணமாகவே அவர்கள் இங்குள்ள நிலவரங்களை அறிந்திருந்தனர். டமாஸ்கஸ் ஒரு கோட்டை போன்ற மதில் சூழ்ந்த நகரமாக இருந்தது. பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றின் காரணமாக, அதற்கு தனித்துவமான அந்தஸ்து கிடைத்திருந்தது. அதன் சுற்றுச் சுவர் பெரும், பெரும் கற்களால் கட்டப்பட்டிருந்தது. சுற்றுச் சுவரின் உயரம் ஆறு மீட்டராக இருந்தது. அதில் மிகவும் வலிமையான கதவுகளும் அமைக்கப்பட்டிருந்தன. சுற்றுச் சுவரின் அகலம் மூன்று மீட்டராக இருந்தது. கதவுகள் மிகவும் உறுதியாக அடைக்கப்பட்டிருந்தன. சுற்றுச் சுவரின் நாலாபுறமும் அகழ்கள் இருந்தன. அதன் அகலம் மூன்று மீட்டராக இருந்தது. அந்த அகழ் நதியின் தண்ணீரால் எப்போதும் நிரப்பப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு டமாஸ்கஸ் மிகவும் பலமான, பாதுகாப்பான அந்தஸ்தை பெற்றிருந்தது. அதில் நுழைவது எளிதான விஷயம் அல்ல.

(அலி முஹம்மது அஸ்ஸலாபி அவர்களின் நூல்-ஸய்யிதுனா உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள், பக்கம் 725, மக்தபா அல்ஃபுர்கான் முஸஃபர் கட்)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சிரியாவை நோக்கி பல்வேறு படைகளை அனுப்பி வைத்தபோது, ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களை ஒரு படையின் அமீராக ஆக்கி ஹிம்ஸ் எனும் இடத்தை சென்றடைவதற்கு கட்டளையிட்டார்கள். ஹிம்ஸ் என்பது டமாஸ்களிற்கு அருகில் இருக்கும் சிரியாவின் ஒரு பழைய, பிரபலமான, பெரிய நகரமாக இருந்தது. (தாரீகுத் தபரி தொகுதி 2 பக்கம் 333, தாருல்குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கட்டளையின்படி ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் டமாஸ்களை சென்றடைந்து, இஸ்லாமியப் படைகளுடன் அதனை முற்றுகையிட்டுவிட்டார்கள். டமாஸ்கஸ் வாசிகள் கோட்டையின் சுவரின் மீது ஏறி நின்று கொண்டு முஸ்லிம்கள் மீது கற்களையும், அம்புகளையும் எறிந்து கொண்டிருந்தார்கள்.

சந்தர்ப்பம் பார்த்து முஸ்லிம்களும் அவர்கள் மீது அம்புகள் எய்து வந்தனர். இவ்வாறு இருபது நாட்கள் கழிந்தன. ஆனால் எந்த ஒரு விளைவும் கிடைக்கவில்லை. டமாஸ்கஸ் வாசிகள் கோட்டையினுள் முற்றுகையிடப்பட்டிருந்ததன் காரணமாக கடுமையான கஷ்டத்திற்கு ஆளாகியிருந்தனர். கோட்டையினுள் இருந்த பொருட்கள் தீர்ந்து போக இருந்தன. அதுமட்டுமின்றி, டமாஸ்கஸ் வாசிகளின் விளைநிலங்கள் கோட்டைக்கு வெளியே இருந்தன. எனவே அவர்களின் விவசாயப் பணிகளில் பாதிப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. கோட்டைக்குள் தானியங்கள் வர முடியாத சூழல் இருந்தது. பொருட்களின் பயன்பாட்டில் தட்டுப்பாடும் ஏற்பட்டிருந்தது. முற்றுகை நீண்டு கொண்டே சென்றதன் காரணமாக, அவர்கள் கடும் கஷ்டத்திற்கும், துன்பத்திற்கும் ஆளாகியிருந்தனர்.

இதற்கிடையில், அதாவது முற்றுகையிடப்பட்டு 20நாட்கள் ஆகியிருந்த அதேநேரத்தில் ஹிர்குல் அரசன் அஜ்னாதைனின் இடத்தில் ரோமானியர்களின் ஒரு பெரும் படையை ஒன்றுதிரட்டிக் கொண்டிருப்பதாக முஸ்லிம்களுக்கு தகவல் கிடைத்தது. இந்த தகவலை கேட்டதுமே, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கிழக்கு வாசலில் இருந்து புறப்பட்டு ஜாபியா வாசலில் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களிடம் வந்தார்கள். மேலும், நிலைமையை எடுத்துரைத்தவாறு, நாம் டமாஸ்களின் முற்றுகையை கைவிட்டுவிட்டு அஜ்னாதைனில் ரோமானிய படையை சமாளிப்போம். அல்லாஹ் நமக்கு வெற்றி வழங்கினால், பின்னர் மீண்டும் இங்கு திரும்பி வருவோம். மேலும் டமாஸ்களின் விவகாரத்திற்கு தீர்வு காண்போம் என்று தனது கருத்தையும் முன் வைத்தார்கள்.

ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் கூறினார்கள்:

எனது கருத்து இதற்கு முற்றிலும் எதிரானது ஆகும். ஏனெனில், இருபது நாட்கள் வரை முற்றுகையிடப்பட்டதன் காரணமாக டமாஸ்கஸ் வாசிகள் துன்பத்திற்கு உள்ளாகிவிட்டனர். மேலும் நம் மீதான மதிப்பச்சம் அவர்களின் உள்ளத்தில் குடிகொண்டு விட்டது. நாம் இங்கிருந்து இடம் பெயர்ந்து சென்றுவிட்டால், பின்னர் அவர்கள் நிம்மதியடைந்துவிடுவார்கள். மேலும்,

உணவுப் பொருட்களை கோட்டையினுள் கருவூலமாக சேகரித்து கொண்டுவிடுவார்கள். மேலும், நாம் அஜ்னாதைனிலிருந்து திரும்பி இங்கு வரும்போது, இந்த மக்கள் நீண்ட காலம் வரை நம்மை எதிர்ப்பதற்கு தகுதி பெற்றுவிடுவார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களின் கருத்தில் உடன்பட்டவாறு, முற்றுகையை தொடர்ந்தார்கள். மேலும், டமாஸ்கஸ் கோட்டையின் பல்வேறு வாசல்களில் பணியமர்த்தப்பட்டிருந்த முஸ்லிம்களின் அனைத்து தலைவர்களும் தத்தமது தாக்குதலை தீவிரப்படுத்தும்படி அவர்களுக்கு கட்டளையிட்டார்கள்.

தாக்குதல்களை தீவிரப்படுத்துவதற்கு முஸ்லிம்களுக்கு ஊக்கம் வழங்கியவாறு, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் சுயமே கிழக்கு வாசலிலிருந்து கடுமையான தாக்குதலை தொடர்ந்து கொண்டிருந்தார்கள். டமாஸ்கஸ் வாசிகள் தற்போது, முற்றிலும் நெருக்கடிக்கு ஆளாகிவிட்டார்கள். மேலும், ஹிர்குல் அரசனின் உதவிக்காக காத்திருந்தனர். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களோ தொடர் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தார்கள். அன்னார் (ரலி) இதேபோன்று, போரில் மும்முரமாக இருந்தார்கள். அப்போது, கோட்டையின் சுவர்களில் நின்றிருந்த ரோமானியர்கள் திடீரென கைதட்டி ஆரவாரம் செய்து ஆட்டம் போட்டு துள்ளிக் குதித்து, மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டிருந்ததை அன்னார் (ரலி) அவர்கள் கண்டார்கள். முஸ்லிம்களும் ஆச்சரியத்துடன் அதனைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஒரு பக்கம் இதனைக் கண்டார்கள். அதேநேரம், ஒரு பெரும் புழுதி படலம் இந்தப் பக்கம் கிளம்புவது போன்று தென்பட்டது. அதன் காரணமாக, வானம் இருளாக காணப்பட்டது. பகல் நேரத்திலும், இருள் சூழ்ந்தவாறு தென்பட்டது. அப்போது, ஹிர்குல் அரசனின் படை டமாஸ்கஸ் வாசிகளின் உதவிக்காக வந்து கொண்டிருக்கிறது என்பதை ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் உடனடியாக புரிந்து கொண்டார்கள். சிறிதுநேரத்தில், சில ஒற்றர்கள் அந்த தகவலை உறுதிப்படுத்திவிட்டனர். நாங்கள் மலையின் உச்சியின் பக்கம் ஒரு பெரும் படை வருவதைக் கண்டோம். மேலும், நிச்சயமாக அது ரோமானியர்களின் படை ஆகும் என்று அவர்கள் கூறினர். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் உடனடியாக வந்தார்கள். மேலும், ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களிடம், நிலைமையை எடுத்துக் கூறி, நான் அனைத்துப் படைகளையும் அழைத்துக் கொண்டு ஹிர்குலால் அனுப்பப்பட்ட படையை எதிர்கொள்ள செல்வதற்கு எண்ணம் கொண்டுள்ளேன். எனவே, இது தொடர்பாக தங்களின் ஆலோசனை என்ன? என்று கேட்டார்கள்.

அதற்கு, ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் கூறினார்கள்:

இது நல்லதல்ல. ஏனெனில், நாம் இந்த இடத்தை விட்டுவிட்டால் டமாஸ்கஸ் வாசிகள் கோட்டையை விட்டு வெளியே வந்து நம்முடன் போர் புரிவார்கள். ஒரு பக்கத்திலிருந்து, ஹிர்குல் படை நம் மீது தாக்குதல் நடத்தும். மற்றொரு பக்கத்திலிருந்து, டமாஸ்கஸ் வாசிகள் தாக்குதல் நடத்துவார்கள். நாம் ரோமானியர்களின் இரு படைகளுக்கு நடுவே துன்பத்தில் சிக்கிக் கொள்வோம்.

அப்போது, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

அப்படியென்றால், தங்களின் கருத்து என்ன? என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கேட்டார்கள்: அதற்கு, ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள், நீங்கள் ஒரு தைரியமிக்க, வீரமான நபர் ஒருவரை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். அவருடன் எதிரியை எதிர்கொள்வதற்காக ஒரு குழுவை அனுப்பி வையுங்கள் என்று கூறினார்கள்.

ஆக, ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸிரார் பின் அஸ்வர் (ரலி) அவர்களுக்கு ஐநூறு சவாரிகளைக் கொண்ட படையை கொடுத்து, ரோமானியப் படையை எதிர்கொள்வதற்கு அனுப்பி வைத்தார்கள். மற்றோர் அறிவிப்பில், ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்களின் படையினரின் எண்ணிக்கை ஐந்தாயிரமாக இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

(அப்துஸ் ஸதார் ஹம்தானி அவர்களின் நூல்-மார்தானே அரபு, பாகம் 1, பக்கம் 203-204 அக்பர் புக் செல்லர்ஸ் லாஹூர்)

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்கள் ஐநூறு போர் வீரர்களை உள்ளடக்கிய படையை அழைத்துக் கொண்டு ரோமானியப் படையை நோக்கி புறப்பட்டுவிட்டார்கள்.

சில படைவீரர்கள், ரோமானியர்களின் படையைக் கண்டு, இது மாபெரும் படையாகும். நாமோ வெறும் ஐநூறு நபர்கள் தான் இருக்கின்றோம். எனவே நாம் திரும்பி சென்றுவிடுவதும், நமது படையுடன் இணைந்து அவர்களை எதிர்கொள்வதுமே சிறந்தது என்று அன்னாரிடம் கூறினர்.

ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எதிரிகளின் மிகுதியான எண்ணிக்கையைக் கண்டு அஞ்ச வேண்டாம். இறைவன் பல முறை பெரும்பான்மையை சிறுபான்மையினரால் வெற்றிக் கொள்ளச் செய்துள்ளான். அந்த இறைவன் இப்போதும், நமக்கு உதவி செய்வான். தோழர்களே! திரும்பி செல்வது என்பது அல்லாஹ்வின் வழியில் ஜிஹாது செய்வதிலிருந்து புறமுதுகு காட்டி ஓடுவதாகும். அதனை அல்லாஹ் விரும்புவதில்லை. நீங்கள் அரேபியர்களின் வீரம் மற்றும் உயிரை அர்ப்பணிக்கும் சிறப்புகளின் மீது கறை படியச் செய்வீர்களா?

எவர் திரும்பி செல்ல வேண்டுமோ திரும்பி செல்லட்டும். நான் சண்டையிடுவேன். இஸ்லாத்தின் பெயரை உயர்த்துவேன். இறைவன் என்னை ஓட்டம் பிடித்தவனாக காணக் கூடாது.

அப்போது, நாங்கள் இஸ்லாத்தில் எங்கள் உயிரை அர்ப்பணித்துவிடுவோம், ஷஹாதத் அந்தஸ்தை பெறுவோம் என்று அனைத்து முஸ்லிம்களும் ஒருமித்த குரலில் கூறினர். அதாவது, நாங்கள் போருக்காக தயாராக உள்ளோம் என்று கூறினர்.

எனவே, ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். மேலும், எதிரியின் மீது ஒரேடியாக தாக்குதல் நடத்தி அவர்களை அழித்துவிடுங்கள் என்று கட்டளையிட்டார்கள். முஸ்லிம்களும், ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்களும் ரோமானியப் படையின் மீது தொடர் தாக்குதல் நடத்தினர். மேலும் வீரத்துடன் போரிட்டனர்.

ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்கள் மீது ரோமானியப் படைத் தளபதியின் மகன் தாக்குதல் நடத்தினான். அன்னாரின் இடது கையில் ஈட்டியால் குத்தினான். அதன் காரணமாக, வேகமாக இரத்தப் போக்கு ஏற்பட்டது. ஒரு நொடிக்குப் பிறகு, அன்னார் (ரலி) அவர்கள் அவனது இதயத்தில் ஈட்டியால் தாக்கி அவனை கொன்றுவிட்டார்கள். அன்னாரின் ஈட்டி அவனது நெஞ்சில் சிக்கிக் கொண்டது. மேலும், அவன் இறந்துவிட்டான். ரோமானியப் படை அன்னாரிடம் ஈட்டி இல்லை என்பதைக் கண்டபோது, அன்னாரின் மீது தாக்குதல் நடத்தி, அன்னார் (ரலி) அவர்களை கைது செய்துவிட்டது.

(ரஃபீக் அன்ஜும் மக்கி அவர்களின் நூல்-இஸ்லாமியப் போர்கள், பக்கம் 123-125, தாருல் குதுப், லாஹூர்)

அன்னார் (ரலி) அவர்களின் கரத்தில் ஆயுதம் இல்லாத காரணத்தால், எதிரிகள் அன்னாரைக் கைது செய்துவிட்டனர்.

ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்கள் கைது செய்யப்பட்டுவிட்டார்கள் என்பதை சஹாபா பெருமக்கள் கண்டபோது மிகவும் துன்பமும், வேதனையும் அடைந்தனர். அவர்கள் பல தற்காப்பு தாக்குதல்களை நடத்தினர். எனினும், அன்னாரை விடுவிக்க முடியவில்லை. ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்கள் கைது செய்யப்பட்ட தகவல் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு கிடைத்தபோது, அன்னார் மிகவும் வேதனை அடைந்தார்கள். ரோமானியப் படைக் குறித்து தோழர்களிடமிருந்து தகவல்களைப் பெற்று ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களிடம் ஆலோசனை செய்தார்கள். மேலும்,

தாக்குதல்கள் தொடர்பாக, கருத்து கேட்டார்கள்.

அதற்கு, ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள், டமாஸ்கஸை முற்றுகையிடுவதற்கு முறையான ஏற்பாடு செய்துவிட்டு, நீங்கள் தாக்குதல் நடத்தலாம் என்று கூறினார்கள். அந்நேரத்தில் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் படைத் தளபதியாக இருந்தார்கள். எனவே, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் முற்றுகைக்கான ஏற்பாடு செய்துவிட்டு, தமது தோழர்களுடன் எதிரியை பின்தொடர்ந்தார்கள். மேலும், எதிரியை சந்தித்தவுடன் திடீர் தாக்குதல் நடத்திவிட வேண்டும் என்று அவர்களுக்கு அன்னார் கட்டளை வழங்கினார்கள். ஸிராரை அவர்கள் கொலை செய்யவில்லையென்றால், நம்மால் ஸிராரை விடுவித்து கொண்டு வருவோம். அவர்கள் ஒருவேளை ஸிராரை ஷஹீதாக்கிவிட்டால், இறைவன் மீது ஆணையாக! நிச்சயம் நாம் அவர்களை முழுமையாக பழிவாங்குவோம். எனினும், அல்லாஹ் ஸிராரைக் குறித்து நம்மை வேதனையடையச் செய்ய மாட்டான் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என்று கூறினார்கள். இதற்கிடையில், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், ஒரு போர் வீரர் சிவப்புக் குதிரையில் இருப்பதைக் கண்டார்கள். அவரது கையில் நீளமான, ஒளிமயமான ஈட்டி இருந்தது. அவரது புறத்தோற்றத்திலிருந்து வீரமும், புத்திச் சாலித்தனமும், போர் நிபுணத்துவமும் தெளிவாக வெளிப்பட்டிருந்தது. அவர் போர் கவசத்திற்கு மேல் ஆடை அணிந்திருந்தார். மேலும், அவரது முழு உடலும், முகமும் மறைந்திருந்தது. மேலும் அவர் படைக்கு முன்னால் சென்று கொண்டிருந்தார்.

இந்த போர் வீரர் யார்? என்று எனக்கு தெரிய வேண்டுமே! என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஆசைப்பட்டார்கள். மேலும், அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்த நபர் மிகவும் வீரராகவும், துணிச்சல் மிக்கவராகவும் தெரிகிறாரே! என்றும் அன்னார் (ரலி) கூறினார்கள்.

அனைத்து மக்களும், அவருக்கு பின்னால் சென்று கொண்டிருந்தார்கள். இஸ்லாமியப் படை நிராகரிப்பாளர்களுக்கு அருகில் வந்தடைந்தபோது, பருந்து சிட்டுக் குருவிகள் மீது பாய்வதைப் போன்று அந்த நபர் ரோமானியர்கள் மீது (பாய்ந்து) தாக்குதல் நடத்திக் கொண்டிருந்ததை மக்கள் கண்டனர். அவரது ஒரு தாக்குதல், எதிரிப் படையை அச்சுறுத்திவிட்டது. மேலும், எதிரிகளை கொன்று குவித்துவிட்டது. அவர் முன்னேறிச் சென்று, முன்னேறிச் சென்று எதிரிப் படைக்கு நடுவே சென்று விட்டார். அவர் தமது உயிரை அபாயத்தில் போட்டுக் கொண்டிருந்ததார். அவர் மீண்டும் திரும்பினார். மேலும் நிராகரிப்பாளர்களின் படையை கிழித்துக் கொண்டே உள்ளே நுழைந்துவிட்டார். முன்னால் வந்த எதிரிகளை துண்டு துண்டாக்கிவிட்டார்.

இந்த நபர் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களாகவே இருப்பார் என்று சில மக்கள் கருதினர். இவர் யார்? என்று ராஃபி அவர்கள் மிகவும் ஆச்சரியத்துடன் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். எனக்கு தெரியாது. இவர் யார்? என்று நான் சுயமே ஆச்சரியத்தில் இருக்கின்றேன என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் படைக்கு முன்னால் நின்று கொண்டிருந்தார்கள். சவாரியிலிருந்த அதேநபர் மீண்டும், ரோமானியர்களின் படையிலிருந்து வெளியேறினார். ரோமானியர்களின் எந்தவாரு போர் வீரரும், அவரை எதிர் கொள்ளவதற்கு முன்னால் வரவில்லை. இதற்கிடையில், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தாக்குதல் நடத்தி நிராகரிப்பாளர்களை சுற்றி வளைத்துவிட்டார்கள். மேலும், அந்த நபர் இஸ்லாமியப் படையில் வந்து சேர்ந்து கொண்டார். அப்போது, நீர் உமது கோபத்தை அல்லாஹ்வின் எதிரியின் மீது காட்டிவிட்டீர். நீர் யார்? என்று கூறும் என ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவரிடம் கேட்டார்கள். அதற்கு அந்த சவாரியில் இருந்த நபர் எதுவும் கூறவில்லை. மேலும், மீண்டும் போருக்கு தயாராகிவிட்டார்.

அப்போது, அல்லாஹ்வின் அடியாரே! நீர் என்னையும், அனைத்து முஸ்லிம்களையும் நிம்மதியிழக்கச் செய்துவிட்டீர். ஆனால், நீரோ இந்த அளவு பொருட்படுத்தாமல் இருக்கின்றீர். இறுதியில் நீர் யார்? என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் அழுத்தத்தின் காரணமாக, அந்த நபர் பதிலளித்தார்:

நான் கீழ்படியாமையின் காரணமாக முகம் திருப்பினேன் என்பதும், நான் கட்டுப்படாமையின் காரணமாக உங்களுக்கு பதிலளிக்கவில்லை என்பதும் சரியல்ல. மாறாக, நான் நாணம் கொள்கிறேன். ஏனெனில், நான் ஆண் அல்ல. நான் ஒரு பெண் ஆவேன்.

பெண்களும் கூட இந்த அளவிற்கு வீரத்தின் முன்மாதிரியை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனது வேதனை மிக்க உள்ளம் என்னை போர் மைதானத்தில் இறக்கியுள்ளது. நீர் எந்தப் பெண்? என்று ஹஸ்ரத் காலித் (ரலி) கேட்டார்கள். அதற்கு நான் ஸிராரின் சகோதரி கவ்லா பின்த் அஸ்வர் ஆவேன். எனது சகோதரரின் கைது பற்றி தெரிந்தபோது, நான் செய்ததை நீங்கள் கண்டு கொண்டீர்கள் என்று அந்தப் பெண் கூறினார். இதைக் கேட்ட ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், நாம் அனைவரும் ஒன்றிணைந்து தாக்குதல் நடத்த வேண்டும். அல்லாஹ் ஸிராரை சிறையிலிருந்து விடுவித்துவிடுவான் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என்று கூறினார்கள். நானும் தாக்குதலில் முன்னணியில் இருப்பேன் என்று ஹஸ்ரத் கவ்லா (ரலி) கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் காலித் (ரலி) முழுமையான தாக்குதலை நடத்தினார்கள். ரோமானியர்களின் பாதங்கள் தடுமாறிவிட்டன. மேலும் ரோமானியர்களின் படை சிதறுண்டுவிட்டது. ஹஸ்ரத் ராஃபி (ரலி) அவர்கள் வீரத்தின் ஆற்றலை வெளிப்படுத்தினார்கள். முஸ்லிம்கள் ஒரு முறை மீண்டும் முழுமையான தாக்குதலுக்கு தயாராகி இருந்தார்கள். அப்போது, திடீரென நிராகரிப்பாளர்களின் படையிலிருந்து, சில சவாரிகள் விரைவாக அடைக்கலம் வேண்டியவாறு இந்தப் பக்கம் வந்துவிட்டனர்.

அந்த மக்களுக்கு அடைக்கலம் வழங்கி விடுங்கள். மேலும், என்னிடத்தில் அவர்களை கொண்டு வாருங்கள் என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர், நீங்கள் யார்? என்று ஹஸ்ரத் காலித் (ரலி), அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு, நாங்கள் ரோமானியப் படையினர் ஆவோம். நாங்கள் ஹிம்ஸ் வாசிகள் ஆவோம். நாங்கள் சமாதானத்தை விரும்புகிறோம் என்று அவர்கள் கூறினர்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

ஹிம்ஸை சென்றடைந்த பிறகே சமாதானம் செய்து கொள்ளப்படும். இங்கு அந்த காலத்திற்கு முன்பாகவே சமாதானம் செய்து கொள்ளப்படாது. எனினும், உங்களுக்கு அடைக்கலம் வழங்கப்படும். அல்லாஹ் தீர்ப்பு வழங்கும் போதும், நாங்கள் வெற்றி பெற்றுவிடும் போதும் அங்கு பேச்சுவாரத்தை நடத்தப்படும். ஆயினும், நீங்கள் ஒன்றை கூறுங்கள். உங்களது தலைவரின் மகனை எங்களது ஒரு போர் வீரர் கொலை செய்திருந்தார். அவரைக் குறித்து, உங்களுக்கு ஏதாவது தெரியுமா? தெரியாதா?

அதற்கு, அநேகமாக, நீங்கள் ஆடையின்றி இருந்த, எங்களது ஏராளமான ஆட்களையும், தலைவரின் மகனையும் கொலை செய்த நபரைக் குறித்து கேட்கின்றீர்கள் என்று நினைக்கிறோம் என்று அவர்கள் கூறினர். ஆம்! அவர் தான், என்று ஹஸ்ரத் காலித் (ரலி) கூறினார்கள்.

அப்போது, அந்த மக்கள் கூறினர்:

அவர் கைது செய்யப்பட்டபோது, வர்தானிடம் கொண்டு வரப்பட்டார். அப்போது, அவர் அரசரிடம் கொண்டு செல்லப்படுவதற்காக நூறு சவாரிகளைக் கொண்ட கூட்டத்தினருடன் வர்தான் அவரை அனுப்பி வைத்துவிட்டான். இதைக் கேட்ட ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும், நீங்கள் வழிப்பாதைகளை நன்றாக அறிவீர்கள். எனவே, உங்களுக்கு விருப்பமான இளைஞர்களை அழைத்துக்

கொண்டு எதிரிகள் ஹிம்ஸை அடைவதற்கு முன்பாக, ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்களை, அந்த மக்களிடமிருந்து விடுவித்துக் கொண்டு வாருங்கள். மேலும், அல்லாஹ்விடம் நற்கூலி பெறுங்கள் என்று ஹஸ்ரத் ராஃபிஃ (ரலி) அவர்களை அழைத்துக் கூறினார்கள். ஹஸ்ரத் ராஃபிஃ (ரலி) அவர்கள் நூறு இளைஞர்களை தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். மேலும், அவர்கள் புறப்பட இருந்தார்கள். அந்நிலையில், ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் பணிவுடன் விண்ணப்பித்து, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடமிருந்து அனுமதி பெற்று விட்டார்கள். அனைவரும் ஹஸ்ரத் ராஃபிஃ (ரலி) அவர்களின் தலைமையில், விரைந்து சென்றனர். மேலும் ஓர் இடத்தை அடைந்து, நீங்கள் மகிழ்ச்சியடையுங்கள், இன்னும் எதிரி இந்த இடத்தை கடந்து செல்லவில்லை என்று அன்னார் (ரலி) தமது தோழர்களிடம் கூறினார்கள். மேலும், அங்கு தமது படையின் சிறு குழுவை ஒளிந்திருக்கச் செய்தார்கள். அவர்கள் அந்த நிலையிலேயே இருந்தபோது, புழுதி படலம் எழுவதைக் கண்டனர். முஸ்லிம்கள் எச்சரிக்கையாக இருக்கும்படி ஹஸ்ரத் ராஃபிஃ (ரலி) அவர்கள் கட்டளையிட்டார்கள். முஸ்லிம்கள் தயாராக அமர்ந்திருந்த நிலையில் ரோமானியர்கள் வந்தடைந்து விட்டனர். ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அந்த மக்களிடம் கைதியாக இருந்தார்கள்.

மேலும், வேதனை நிறைந்த குரலில் இந்தக் கவிதை வரிகளை படித்துக் கொண்டிருந்தார்கள்:

ஒற்றனே! நான் கைதியாக இருக்கின்றேன். மேலும், கூண்டுக்குள் அடைக்கப்பட்டுள்ளேன். தோல்பைகளால் கட்டப்பட்டுள்ளேன் என்ற செய்தியை எனது சமுதாயத்திற்கும், கவ்லாவிற்கும் எட்ட வைத்து விடு.

சிரியாவின் நிராகரிப்பாளர்களும், மார்க்கமற்றவர்களும் என்னைச் சுற்றி சூழ்ந்துள்ளனர். அனைவரும் கவசம் அணிந்துள்ளனர். இதயமே! நீ வேதனை மற்றும் ஏக்கத்தால் மடிந்து விடு. மேலும், வீரனின் கண்ணீர் துளியே! எனது கன்னத்தில் வழிந்து விடு.

இந்தக் கவிதையை அன்னார் (ரலி) அவர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். அதன் மொழியாக்கம் இவ்வாறாகும்.

அப்போது, உமது துஆ கபூல் ஆகிவிட்டது. அல்லாஹ்வின் உதவி வந்துவிட்டது. நான் உமது சகோதரி கவ்லா ஆவேன் என்று ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் மிகவும் சப்தமாக குரல் கொடுத்தார்கள். மேலும் இவ்வாறு கூறியவாறு, அவர் மிகவும் உரத்த குரலில் தக்பீர் முழக்கமிட்டு தாக்குதல் நடத்திவிட்டார்கள். மேலும், ஏனைய முஸ்லிம்களும் தக்பீர் முழக்கமிட்டவாறு, தாக்குதல் நடத்திவிட்டனர். முஸ்லிம்கள் அந்தக் குழுவினரை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டனர். எதிரிகள் அனைவரும் கொல்லப்பட்டனர். ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்களை அல்லாஹ் விடுவித்துவிட்டான். மேலும், போர் செல்வங்கள் முஸ்லிம்களுக்கு கிடைத்துவிட்டன. ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் தமது கரங்களால், தமது சகோதரரின் கயிற்றை அவிழ்த்துவிட்டார்கள். மேலும், ஸலாம் கூறினார்கள். ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்கள் தமது சகோதரியை பாராட்டி, வரவேற்றார்கள். ஒரு நீண்ட ஈட்டியை கையில் எடுத்தார்கள். மேலும் ஒரு குதிரையின் மீது அமர்ந்து சவாரி செய்தார்கள். இறைவனுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

இங்கு இந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. அங்கு டமாஸ்கஸில், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கடுமையான தாக்குதலை நடத்தி வர்தானை தோல்வியடையச் செய்துவிட்டார்கள். அந்த மக்கள் ஓடிவிட்டனர். முஸ்லிம்கள் அவர்களை பின் தொடர்ந்து சென்றனர். அங்கு ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்களும் ஏனைய முஸ்லிம்களும் சந்தித்தனர். வெற்றியின் செய்தி ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களுக்கு அனுப்பப்பட்டது. இனி டமாஸ்கஸ் வெற்றிக் கொள்ளப்படும் என்று முஸ்லிம்களுக்கு உறுதி ஏற்பட்டுவிட்டது.

(ஃபஸ்ல் முஹம்மது யூஸுஃப் ஸயி அவர்களின் நூல்-ஃபுதுஹாதே ஷாம், பக்கம் 75-81, மக்தபா ஈமான் வ யகீன்)

மற்றொரு பக்கம், இஸ்லாமியப் படை டமாஸ்கஸில் முகாமிட்டிருந்தது. மேலும் கோட்டையை முற்றுகையிட்டிருந்தது. அப்போது புஸ்ராவிலிருந்து ஹஸ்ரத் அப்பாத் பின் ஸயீத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். மேலும், ரோமானியர்களின் 90ஆயிரம் படைகள் அஜ்னாதைன் என்ற இடத்தில் ஒன்று திரண்டுள்ளன என்ற தகவலைக் கொடுத்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களுடன் ஆலோசனை செய்தார்கள். அப்போது, அன்னார் (ரலி) கூறினார்கள்:

நமது படை சிரியா நாட்டில் பல்வேறு இடங்களில் பிரிந்து இருக்கின்றது. எனவே, அவர்கள் அனைவரும் அஜ்னாதைனில் வந்து ஒன்று சேரும்படி அவர்கள் அனைவருக்கும் கடிதம் எழுதிவிடுங்கள். நாமும், இனி டமாஸ்கஸ் கோட்டையின் முற்றுகையை விட்டு விட்டு அஜ்னாதைனின் பக்கம் இடம் பெயர்ந்து சென்றுவிடுவோம்.

(அப்துல் ஸத்தார் ஹம்தானி அவர்களின் நூல்-மர்தானே அரபு பாகம் 1, பக்கம் 214, அக்பர் புக் செல்லர்ஸ் லாஹூர்)

ஹிர்குலிற்கு, வர்தானின் தோல்வியைப் பற்றிய செய்தி கிடைத்திருந்தது. மேலும், அவனது மகன் கொலையுண்டது தொடர்பான முழு நிலவரத்தையும் அவன் அறிந்து கொண்டான். எனவே, ஹிர்குல் அவனைக் கடிந்து கொண்டவாறு கடிதம் எழுதினான்:

நிர்வாணமானவும், பசி பட்டினியிலும் கிடக்கும் அரேபியர்கள் உம்மை தோற்கடித்துவிட்டனர். மேலும் உமது மகனைக் கொன்றுவிட்டனர் என்ற செய்தி எனக்கு கிடைத்துள்ளது. மஸீஹ் அவன் மீது கருணை காட்டவில்லை. உம் மீதும் கருணை காட்டவில்லை. உனது வீரம் மற்றும் உனது வாள் திறமையினைக் குறித்த புகழ் இல்லையென்றால் நான் உன்னைக் கொலை செய்திருப்பேன். பரவாயில்லை. நடந்தது நடந்ததாக இருக்கட்டும். நான் அஜ்னாதைன் நோக்கி 90ஆயிரம் படையை அனுப்பியுள்ளேன். அதற்கு உன்னை நான் தலைவனாக நியமிக்கின்றேன். (ஃபஸ்ல் முஹம்மது யூஸுஃப் ஸயி அவர்களின் நூல்-பக்கம்81, மக்தபா ஈமான் வ யகீன்)

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் டமாஸ்கஸின் முற்றுகையை விலக்கிக் கொண்டு, அஜ்னாதைனை நோக்கி புறப்படுவதற்கு படைக்கு கட்டளையிட்டார்கள். கட்டளை கிடைத்ததும், முஸ்லிம்கள் உடனடியாக கூடாரத்தை கழற்றிவிட்டு பொருட்களை ஒட்டகங்களில் ஏற்றத் தொடங்கிவிட்டனர். போர் செல்வங்களின் ஒட்டகங்கள் மற்றும் இதர பொருட்களை பெண்கள் மற்றும் குழந்தைகளுடன் படைக்குப் பின்பக்கம் வைத்தார்கள். ஏனைய சவாரிகளை படைக்கு முன்னால் நிறுத்தினார்கள்.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) கூறினார்கள்: எனது கருத்து என்னவென்றால், நான் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பயணக் குழுவுடன் படைக்குப் பின்னால் இருந்து கொள்கிறேன். நீங்கள் படைக்கு முன்னால் இருங்கள் என்று ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்.

அப்போது, ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் கூறினார்கள்:

வர்தான் தனது படையை அழைத்துக் கொண்டு அஜ்னாதைனிலிருந்து டமாஸ்கஸ் நோக்கி புறப்பட்டிருக்கக் கூடும். மேலும், நாம் வழியில் அவனை எதிர்கொள்வதற்கும் சாத்தியம் உள்ளது. நீங்கள் படைக்கு முன்னால் இருந்தால் உங்களால் அவனை தடுக்க முடியும். மேலும் சண்டையிட முடியும். எனவே, நீங்கள் முன்னால் இருங்கள். நான் பின்னால் இருக்கின்றேன்.

அதற்கு, உங்கள் கருத்து சரியானதாகும். நான் உங்களின் கருத்திற்கும், ஆலோசனைக்கும் எதிராக செயல்பட மாட்டேன் என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

இஸ்லாமியப் படை டமாஸ்கஸின் முற்றுகையை விலக்கிக் கொண்டு

புறப்பட்டபோது, படை இடம் பெயர்ந்து செல்வதைக் கண்ட டமாஸ்கஸ் வாசிகள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தனர். மேலும் கைதட்டி ஆரவாரம் செய்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இஸ்லாமியப் படை இடம் பெயர்ந்து சென்றது தொடர்பாக, டமாஸ்கஸ் வாசிகள் பல்வேறு கருத்துகளை வெளிப்படுத்தி வந்தனர். ஒருவர் கூறினார்: அஜ்னாதைனில் நமது மாபெரும் படை ஒன்று திரண்ட தகவலை அறிந்து முஸ்லிம்கள் சிரியா நாட்டில் உள்ள தங்களது ஏனைய படையுடன் அணிதிரள்வதற்காக சென்றுள்ளனர்.

முற்றுகையால் துன்பத்திற்கு ஆளாகி, வேறொரு இடத்தில் தாக்குதல் நடத்துவதற்காக செல்கின்றனர் என்று மற்றொருவர் கூறினார். வேறு சிலரோ, ஹஜ்ஜாஸ் நாட்டை நோக்கி தப்பியோடுகின்றனர். திரும்பி செல்கின்றனர் என்ற அளவிற்கு கூறினர். (அப்துஸ் ஸத்தார் ஹம்தானி அவர்களின் நூல்-மர்தானே அரபு பக்கம் 216-217, அக்பர் புக் செல்லர்ஸ் லாஹூர்)

டமாஸ்கஸ் வாசிகளில் எவ்வளவு நபர்கள் இருந்தனரோ, அவர்கள் அனைவரும் பூலஸ் என்ற பெயர் கொண்ட நபரிடம் ஒன்று கூடிவிட்டனர். அவன் இதற்கு முன்னர், எந்தப் போரிலும் சஹாபிகளை எதிர் கொண்டதில்லை. அந்த நபர் ஹிர்குலின் மிகவும் நம்பிக்கைக்குரியவனாகவும், அம்பு எய்துவதில் மிகவும் உயர் அந்தஸ்தை பெற்றவனாகவும் இருந்தான். டமாஸ்கஸ் வாசிகள் அவனை அமீராக்கிக் கொண்டனர். எல்லா வகையான பேராசையையும் ஊட்டி அவனை போருக்கு ஆயத்தப்படுத்தினார்கள். மேலும், நாங்கள் போர் மைதானத்தை விட்டு விலகி ஓட மாட்டோம். மேலும் எங்களில் எவர் மைதானத்தை விட்டு விலகி ஓடினாலும் அவரை உமது கைகளால் கொலை செய்துவிடுவதற்கு உமக்கு அதிகாரம் உண்டு என்றும் அவர்கள் சத்தியம் செய்தனர். இந்த உறுதிமொழியும், உடன்படிக்கையும் முழுமையடைந்துவிட்டது. மேலும் பூலஸ் வீட்டில் நுழைந்து போர் கவசத்தை அணியத் தொடங்கினான். அப்போது, எங்கே செல்கின்றீர்? என்று அவரது மனைவி கேட்டார். அதற்கு, டமாஸ்கஸ் வாசிகள் என்னை தமது அமீராக ஆக்கிவிட்டார்கள். தற்போது நான் அரேபியர்களுடன் போர் புரிவதற்காக செல்கிறேன் என்று பூலஸ் கூறினான்.

மனைவி அவனிடம் கூறினாள்: அவ்வாறு செய்யாதீர். மாறாக, வீட்டில் அமர்ந்திருப்பீராக. அரேபியர்களுடன் போர் புரிவதற்கு உங்களிடம் வலிமை இல்லை. அவர்களுடன் தேவையில்லாமல் போர் புரியாதீர்கள். நான் இன்றுதான் கனவில் கண்டேன். உமது கையில் வில் உள்ளது. காற்றில், சிட்டுக் குருவிகளை வேட்டையாடுகிறீர். சில சிட்டுக் குருவிகள் காயமுற்று கீழே விழுந்துவிட்டன. ஆனால், மீண்டும் பறக்கத் தொடங்கிவிட்டன. நான் ஆச்சரியத்தில் ஆழ்ந்து விட்டேன். திடீரென பருந்துகள் மேலேயிருந்து வந்துவிட்டதை கனவிலேயே கண்டேன். ஒன்றல்ல, பல பருந்துகள் வந்துவிட்டன. உம் மீதும், உமது தோழர்கள் மீதும் அவை எவ்வாறு தாக்குதல் நடத்தின என்றால் அனைவரையும் அவை அழித்துவிட்டன. நீ என்னையும் கனவில் பார்த்தாயா? என்று பூலஸ் கேட்டான். ஆம்! பருந்து கடுமையாக உன்னை கொத்தியது. அதனால் நீர் மயக்கமடைந்துவிட்டீர் என்று அவள் கூறினான். பூலஸ் அவளது விஷயத்தைக் கேட்டுவிட்டு தமது மனைவியை கன்னத்தில் அறைந்துவிட்டான். மேலும், உனது உள்ளத்தில் அரேபியர்களின் மீதான அச்சம் குடிகொண்டுவிட்டது. கனவிலும் அதே அச்சம்தான் ஏற்பட்டுள்ளது. பதற்றமடைய வேண்டாம். தற்போது நான் அவர்களின் அமீரை உமது சேவகனாகவும், அவர்களின் தோழர்களை ஆடுகள் மற்றும் பன்றிகளின் மேய்ப்பாளர்களாகவும் நான் ஆக்கிவிடுவேன் என்று அவன் கூறினான்.

பூலஸ் மிகவும் விரைவாக, ஆறாயிரம் சவாரிகளையும், பத்தாயிரம் பாதசாரி படை வீரர்களையும் அழைத்துக் கொண்டு, முஸ்லிம்களுக்குப் பின்னால் அவர்களுடன் மோதுவதற்காக புறப்பட்டுவிட்டான். மேலும், இஸ்லாமியப் படையின் பெண்கள், குழந்தைகள், கால்நடைகள் மற்றும் அபூஉபைதாவின் ஓராயிரம் படை வீரர்களை பின் தொடர்ந்து அவன் சென்றான். முஸ்லிம்களும் மோதலுக்கு தயாராகிவிட்டார்கள். பார்த்துக் கொண்டிருக்கும்போதே நிராகரிப்பாளர்கள் வந்தடைந்துவிட்டனர். பூலஸ் எல்லாருக்கும் முன்பாக வந்து கொண்டிருந்தான். அவன் திடீரென ஆறாயிரம் போர் வீரர்களுடன் அபூஉபைதா அவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டான். பூலஸின் சகோதரனான புத்ருஸ் பாதசாரி படை வீரர்களுடன் இருந்த பெண்களின் பக்கம் முன்னேறிச் சென்றான். மேலும், சில பெண்களை கைது செய்து டமாஸ்கஸை நோக்கி திரும்பிச் சென்றான். ஓரிடத்தை சென்றடைந்து தனது சகோதரனை எதிர்பார்த்து அமர்ந்துவிட்டான்.

ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் இந்த துன்பம் மிகுந்த சம்பவத்தை பார்த்துவிட்டு, நான் படைக்கு பின்னால் இருந்து கொள்கிறேன் என்ற காலிதின் கருத்து சரியானதாக இருந்தது என ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) கூறினார்கள். ஒரு பக்கம் பெண்களும், குழந்தைகளும் கதறிக் கொண்டிருந்தார்கள். மற்றொரு பக்கம் ஓராயிரம் முஸ்லிம்கள் வீரத்துடன் சண்டையிட்டார்கள். பூலஸ் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் மீது மீண்டும் மீண்டும் தாக்குதல் நடத்தினான். அன்னார் (ரலி) அவர்களும் கடுமையான தாக்குதல் தொடுத்தார்கள். ஹஸ்ரத் ஸஹ்ல் (ரலி) அவர்கள் அதிவேகமாக ஓடும் குதிரையில் சவாரி செய்து ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை சென்றடைந்தார்கள். மேலும், அனைத்து நிகழ்வுகளையும் எடுத்துரைத்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இன்னா லில்லா ஓதினார்கள். மேலும், அன்னார் (ரலி) அவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளை பாதுகாப்பதற்காக ஹஸ்ரத் ராஃபிஃ (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அஃப் (ரலி) ஆகியோருக்கு ஆயிரம் ஆயிரம் படைவீரர்களை கொடுத்து அனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு, ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்களுக்கு ஓராயிரம் படை வீரர்களைக் கொடுத்து அனுப்பி வைத்தார்கள். மேலும், தாமும் படையை அழைத்துக் கொண்டு எதிரியை நோக்கி சென்றார்கள்.

ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள், பூலஸுடன் போரில் மும்முரமாக இருந்தார்கள். இதற்கிடையில், பல்வேறு இடங்களில் இருந்து வரவேண்டிய முஸ்லிம்களின் படைகளும் வந்தடைந்தன. அவர்கள் எப்படிப்பட்ட தாக்குதல் நடத்தினார்கள் என்றால், டமாஸ்கஸிலிருந்து வந்து தாக்குதல் நடத்தக்கூடிய ரோமானியர்களுக்கு நாம் இழிவடையப் போகிறோம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்கள் நெருப்பின் ஜுவாலையைப் போன்று, பூலஸை நோக்கி முன்னேறிச் சென்றார்கள். அவன் அன்னாரைக்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

கண்டபோது, அவன் நடுநடுங்கினான். அவன் அன்னாரை அடையாளம் கண்டு கொண்டான். பூலஸ் குதிரையிலிருந்து இறங்கி தப்பியோடத் தொடங்கினான். ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்களும் அவனை விரட்டிச் சென்றார்கள். மேலும், அவனை உயிருடன் பிடித்துவிட்டார்கள். மேலும், அவனை கைது செய்துவிட்டார்கள்.

இந்தப் போரில், நிராகரிப்பாளர்களின் ஆறாயிரம் நபர்களில் நூறு நபர்கள் மிகவும் அரிதாகவே உயிர் பிழைத்திருந்தனர். ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்கள் கவலையடைந்தார்கள். ஏனெனில், ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்களும் கைது செய்யப்பட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கூறினார்கள்: பதற்றமடைய வேண்டாம். நாம் அவர்களில் சில நபர்களை கைது செய்திருக்கின்றோம். அவர்களுக்கு பகரமாக, எதிரிகள் மிக எளிதாக அன்னாரை விடுதலை செய்துவிடுவார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இரண்டாயிரம் போர் வீரர்களை தம்முடன் அழைத்துக் கொண்டார்கள். மேலும், எஞ்சிய அனைத்து படையையும் பெண்களின் பாதுகாப்பிற்காக ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களிடம் ஒப்படைத்துவிட்டார்கள். மேலும் அன்னார் சுயமே சிறைபிடிக்கப்பட்ட பெண்களை தேடி புறப்பட்டுவிட்டார்கள். மேலும், எதிரி எந்த இடத்தில் முஸ்லிம் பெண்களை சிறைபிடித்து வைத்திருந்தானோ அந்த இடத்தை அன்னார் (ரலி) அவர்கள் விரைவாக சென்றடைந்துவிட்டார்கள். ஓரிடத்தில் புழுதி கிளம்புவதைக் அன்னார் (ரலி) கண்டார்கள். இங்கு ஏன் போர் நடைபெறுகிறது? என்ற ஆச்சரியம் அன்னாருக்கு ஏற்பட்டது. அப்போது, விசாரித்தபோது பூலஸின் சகோதரன் புத்ருஸ் பெண்களை சிறை பிடித்து வந்து நதியின் அருகே தனது சகோதரனுக்காக காத்திருக்கின்றான் என்பதும், தற்போது அவன் பெண்களை தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டிருக்கின்றான் என்பதும் தெரிய வந்தது. ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்களைக் குறித்து, இவர் எனக்கு சொந்தமானவள் என்று புத்ருஸ் கூறினான். அவர்கள் பெண்களை ஒரு கூடாரத்தில் சிறை பிடித்து வைத்திருந்தனர். மேலும், அவர்கள் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தனர். மேலும், பூலஸிற்காக அவர்கள் காத்திருந்தனர். அந்தப் பெண்களில் பெரும்பான்மையான பெண்கள் வீரமிக்கவர்களாகவும், போர் வீரர்களாகவும் இருந்தனர். அவர்கள் எல்லா வகையான போர்களையும் அறிந்திருந்தனர். அந்தப் பெண்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தனர்.

ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் அந்தப் பெண்களை நோக்கி கூறினார்கள்:

ஹிமர் கோத்திரத்து மகள்களே! மேலும் துப்பஃ கோத்திரத்தின் அடையாளங்களே! ரோமானிய நிராகரிப்பாளர்கள் உங்களை அடிமைப் பெண்களாக ஆக்கிக் கொள்வதில் நீங்கள் திருப்தி கொள்கிறீர்களா? உங்களது வீரம் எங்கே சென்றது? அரேபிய சபைகளில் நினைவுக் கூறப்பட்டு வந்த உங்களின் தன்மானம் எங்கே சென்றது? அந்தோ! பரிதாபம்! நான் உங்களை தன்மானத்திலிருந்து விலகியவர்களாகவும், வீரமற்றவர்களாகவும் காண்கிறேன். வர இருக்கும் துன்பத்தை விட உங்களின் மரணம் மேலானதாகும்.

இதைக் கேட்ட ஒரு சஹாபியா பெண்மணி கூறினார்: கவ்லாவே! நீர் எடுத்துரைத்த எல்லா விஷயங்களும் நிச்சயமாக உண்மையாகும். ஆனால், நாமோ கைதிகளாக இருக்கின்றோம். நமது கரங்களில் ஈட்டியும், வாளும் இல்லை. நம்மால் என்ன செய்ய முடியும்! குதிரையும் இல்லை. ஆயுதமும் இல்லையே. ஏனெனில் திடீரென நாம் கைது செய்யப்பட்டுவிட்டோம்! என்ன செய்வது?

ஹஸ்ரத் கவ்லா (ரலி) கூறினார்கள்:

விழித்துக் கொள்ளுங்கள். கூடாரத்தின் தூண்கள் உள்ளனவே! நாம் அவற்றை எடுத்து இந்த கயவர்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டும். பின்னர் அல்லாஹ் உதவி செய்வான். ஒன்று நாம் வெற்றி பெற்றுவிடுவோம் அல்லது ஷஹீதாகிவிடுவோம்.

அப்போது, அனைத்துப் பெண்களும் கூடாரத்தின் ஒவ்வொரு தடியையும் எடுத்துக் கொண்டனர். ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் ஒரு தடியை தோளில் வைத்துக் கொண்டு முன்னால் சென்றார்கள்.

சங்கிலிகளின் வளையங்களைப்போன்று ஒன்று சேர்ந்து கொள்ளுங்கள். பிரிந்து விடாதீர்கள். இல்லையென்றால் அனைவரும் கொலையுண்டு விடுவீர்கள் என்று ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் தமக்கு கீழ் இருந்த பெண்களிடம் கூறினார்கள்.

அதன் பிறகு, ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் முன்னால் சென்று ஒரு ரோமானிய நிராகரிப்பாளனை அடித்துக் கொன்று விட்டார்கள். ரோமானிய மக்கள் அந்தப் பெண்களின் வீரத்தையும், தீரத்தையும் கண்டு ஆச்சரியத்தில் உறைந்துவிட்டனர். பேறிழந்த பெண்களே! நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? என்று புத்ருஸ் கூறினான். அப்போது, இந்த தடிகளால் இன்று உனது மூளையை சரி செய்துவிடவும், உம்மைக் கொன்று எங்களது கண்ணியத்தை பாதுகாப்பதற்கும் நாங்கள் எண்ணம் கொண்டுள்ளோம் என்று ஒரு சஹாபியா பெண்மணி கூறினார்.

இவர்களை உயிருடன் பிடியுங்கள். குறிப்பாக, கவ்லாவை உயிருடன் பிடிப்பதற்கு சிறப்புக் கவனம் செலுத்துங்கள் என்று புத்ருஸ் கூறினான். நாலாப் புறமும், மூவாயிரம் ரோமானியப் படைகள் அணிவகுத்து நின்றன. ஆனால், எந்த ஒரு நபராலும் (முஸ்லிம்) பெண்களை நெருங்க முடியவில்லை. ஒருவேளை எவரேனும் முன்னேறிச் சென்றால், அந்தப் பெண்கள் முதலில் அவர்களின் குதிரையையும் பின்னர் அவர்களையும் கொன்று வந்தனர். இவ்வாறு அந்தப் பெண்கள் முப்பது சவாரிகளை மரணத்தின் குழியில் இறக்கிவிட்டனர். இதைக் கண்ட புத்ருஸ் நெருப்பை கக்கினான். குதிரையிலிருந்து கீழே இறங்கினான். தனது கூட்டாளிகளுடன் இணைந்து வாள்களால் தாக்குதல் நடத்தினான். ஆயினும், அந்தப் பெண்கள் ஓரிடத்தில் ஒன்றுகூடியிருந்தனர். அனைவருடனும் சண்டையிட்டனர். எவராலும் அவர்களை நெருங்க முடியவில்லை.

ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்களை நோக்கி, புத்ருஸ் கூறினான்: கவ்லாவே! உனது உயிரின் மீது கருணை காட்டு. நான் உனக்கு மதிப்பளிக்கிறேன். எனது இதயத்திலும் உனக்கு நிறைய இடம் உள்ளது. என்னைப் போன்ற அரசன் உனது எஜமானராக ஆகுவது உனக்கு விருப்பமில்லையா? எனது அனைத்து சொத்துகளும் உனது சொத்தாக ஆகுவதை நீ விரும்பவில்லையா?

அதற்கு, ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் கூறினார்கள்:

பேறிழந்த நிராகரிப்பாளனே! இறைவன் மீது ஆணையாக! என்னால் முடிந்தால், நான் தற்போது உனது தலையை தடியால் உடைத்துவிடுவேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீ எனது ஆடுகளையும், ஒட்டகங்களையும் மேய்ப்பதையும்கூட நான் விரும்பவில்லை, அவ்வாறிருக்க எனக்கு சமமானவனாக நீ வாதம் செய்வதை நான் எவ்வாறு விரும்புவேன்?

அப்போது, இவர்கள் அனைவரையும் கொன்றுவிடுங்கள் என்று புத்ருஸ் தனது படையினரிடம் கூறினான். படையினர், மீண்டும் முதலில் இருந்து தயார் ஆனார்கள். தொடக்க தாக்குதலை நடத்த இருந்தார்கள். அதற்குள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் தலைமையிலான முஸ்லிம்கள் அங்கு வந்தடைந்தனர். அன்னாருக்கு அனைத்து நிலைமைகள் மற்றும் சம்பவங்களைக் குறித்தும் தெரிய வந்தது. பெண்களின் வீரம் மற்றும் தாக்குதலை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். பின்னர், முழுப் படையும் நிராகரிப்பாளர்களை சுற்றி முகாமிட்டுவிட்டது. மேலும் ஒன்றாக இணைந்து தாக்கினர்.

ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் உரத்த குரலில், அல்லாஹ்வின் உதவி வந்துவிட்டது. அல்லாஹ் கருணை காட்டிவிட்டான் என்று கூறினார்கள். புத்ருஸ்

முஸ்லிம்களைக் கண்டதும் பயந்துவிட்டான். மேலும், தப்பியோடத் தொடங்கினான். ஆனால், ஓடுவதற்கு முன் இரண்டு முஸ்லிம் போர்வீரர்கள் தம் பக்கம் வருவதை அவன் கண்டான். அவர்களில் ஒருவர் காலித், மற்றொருவர் ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்களாக இருந்தார்கள். ஸிரார் அவர்கள், அவன் மீது ஓர் ஈட்டியால் தாக்குதல் நடத்தினார்கள். அவன் குதிரையிலிருந்து கீழே விழுவதிலிருந்து தப்பிவிட்டான்.

பின்னர், ஸிரார் இரண்டாவது தாக்குதல் நடத்தினார்கள். மேலும் இப்போது அவன் சரிந்துவிட்டான். முஸ்லிம்கள் ஏராளமான ரோமானியர்களைக் கொன்றனர். உயிர் பிழைத்தவர்கள் டமாஸ்கஸிற்கு ஓடிவிட்டனர்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் திரும்பி வந்தபோது, பூலஸை அழைத்தார்கள். மேலும் அவனுக்கு ஸலாம் கூறினார்கள். மேலும் இஸ்லாத்தை எடுத்துரைத்தார்கள். மேலும், இஸ்லாத்தை ஒப்புக் கொள். இல்லையென்றால், உமது சகோதரனுடன் நடந்து கொண்டது போன்றே உம்முடனும் நடந்து கொள்ளப்படும் என்று கூறினார்கள்.

எனது சகோரனுக்கு என்ன ஆனது? என்று பூலஸ் கேட்டான். அவன் கொல்லப்பட்டு விட்டான் என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கூறினார்கள். பூலஸ் தனது சகோதரனின் முடிவைக் கண்டு, இனி வாழ்க்கையில் எந்த சுவையும் இல்லை. என்னையும் எனது சகோதரனுடன் அனுப்பி வைத்துவிடுங்கள் என்று கூறினான். எனவே, அவனும் கொல்லப்பட்டுவிட்டான்.

(ஃபஸ்ல் முஹம்மது யூசுஃப் ஸயி அவர்களின் நூல்-ஃபுதூஹாதே ஷாம், பக்கம் 82-89)

எவ்வாறு இருப்பினும், இஸ்லாமியப் படை மீண்டும் அஜ்னாதைனில் ஒன்று கூடிவிட்டது. அதன் விளக்கம் முன்னர் எடுத்துரைக்கப்பட்டுவிட்டது. இது டமாஸ்கஸின் இரண்டாவது முற்றுகையாக இருந்தது. முதலில் விட்டுவிட்டு வந்திருந்தனர். தற்போது, இந்தப் போருக்குப் பிறகு மீண்டும் நிகழ்ந்த டமாஸ்கஸ் முற்றுகையைக் குறித்து எழுதப்பட்டுள்ளது:

அஜ்னாதைன் வெற்றிக்குப் பிறகு, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இஸ்லாமியப் படையை டமாஸ்கஸை நோக்கி, மீண்டும் புறப்படுவதற்கு கட்டளையிட்டார்கள். டமாஸ்கஸ் வாசிகளுக்கு, அஜ்னாதைனில் ரோமானியப் படைகளுக்கு ஏற்பட்ட தோல்விக் குறித்த தகவல் ஏற்கனவே கிடைத்திருந்தது. ஆனால், இஸ்லாமியப் படை தற்போது டமாஸ்கஸ் நோக்கி வந்து கொண்டிருக்கிறது என்ற தகவல் கிடைத்தபோது அவர்கள் மிகவும் பதற்றமடைந்துவிட்டார்கள். டமாஸ்கஸைச் சுற்றி வசித்து வந்த மக்கள் ஓடிச் சென்று கோட்டையினுள் அடைக்கலம் பெற்றுக் கொண்டார்கள். மேலும், இஸ்லாமியப் படையின் முற்றுகை நீண்டுவிட்டால் பொருட்கள் தீர்ந்து விடக்கூடாது என்பதற்காக கோட்டையில் போதுமான அளவில் தானியங்களையும், அத்தியாவசியப் பொருட்களையும் சேகரித்து வைத்துக் கொண்டார்கள். அதன் பிறகு, ஆயுதங்கள் மற்றும் போர்த் தளவாடங்களையும் ஒன்று கூட்டி வைத்துக் கொண்டனர். கோட்டையின் மதில்களிலிருந்து முற்றுகையாளர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக, கோட்டையின் சுவர்களில் கல், கேடயம், அம்பு, வில், போன்ற பொருட்களை கொண்டு வந்து சேர்த்தார்கள். இஸ்லாமியப் படை டமாஸ்கஸிற்கு அருகே முகாமிட்டது. பின்னர், இஸ்லாமியப் படை முன்னேறிச் சென்று கோட்டையை முற்றுகையிட்டு விட்டது. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் டமாஸ்கஸின் எல்லா வாயில்களிலும், தலைவர்களை அவர்களின் படைகளுடன் பணியமர்த்திவிட்டார்கள். (அப்துஸ் ஸத்தார் ஹம்தானி அவர்களின் நூல்-மர்தானே அரபு பக்கம் 247, அக்பர் புக் செல்லர்ஸ் லாஹூர்)

அந்நேரத்தில் டமாஸ்கஸின் ஆட்சியாளனாக தவ்மா இருந்தான். டமாஸ்கஸின் தலைவர்கள், செல்வந்தர்கள் மற்றும் அறிவுபடைத்த மக்கள் தவ்மாவிற்கு இவ்வாறு ஆலோசனை வழங்கினார்கள்:

அதாவது, இஸ்லாமியப் படையை எதிர்கொள்வதற்கு நமக்கு வலிமை இல்லை. எனவே, ஒன்று ஹிர்குலிடம் உதவி கோருங்கள் அல்லது மீண்டும் முஸ்லிம்களுடன் சமாதானம் செய்து கொள்ளுங்கள். அவர்கள் எதை வேண்டுவார்களோ, அதைக் கொடுத்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

அப்போது அவன் ஆணவத்துடனும், அகந்தையுடனும் இவ்வாறு கூறினான்:

அரேபியர்களுக்கு எந்த மதிப்பும் இருப்பதாக நான் கருதவில்லை. நான் ஹிர்குலின் மாபெரும் மருமகனும், போர் வல்லுநரும் ஆவேன். நான் இருக்கும்போது, முஸ்லிம்களுக்கு நகரத்தில் கால் வைப்பதற்கு துணிவு இருக்காது.

தலைவர்கள் அவனுக்குப் புரிய வைத்தபோது, விரைவில் ஹிர்குலிடமிருந்து ஒரு பெரும் படை நமது உதவிக்காக வர உள்ளது என்று கூறி அவர்களுக்கு தவ்மா ஆறுதல் கூறினான். எல்லாபுறமிருந்தும் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு தவ்மா கட்டளையிட்டான். இந்த தாக்குதல்களின்போது, பல முஸ்லிம்கள் காயமடைந்தனர். பலர் ஷஹீதாயினர். ஹஸ்ரத் அபான் பின் ஸயீத் (ரலி) அவர்கள் மீதும் விஷம் தேய்க்கப்பட்ட அம்பு பாய்ந்தது. அம்பை வெளியேற்றிய பிறகு, அன்னார் காயத்தின் மீது தலைபாகையை கட்டிக் கொண்டார்கள். ஆனால், சிறிது நேரத்திலேயே, விஷம் அவர்களின் உடலில் ஊடுருவி விட்டது. அன்னார் (ரலி) மயங்கி கீழே விழுந்துவிட்டார்கள். மேலும், சிறிதுநேரத்திற்கு பிறகு அங்கேயே ஷஹாதத் பானத்தை அருந்திவிட்டார்கள்.

ஹஸ்ரத் அபான் (ரலி) அவர்களின் திருமணம் போருக்கு மத்தியில், ஹஸ்ரத் உம்மே அபான் (ரலி) அவர்களுடன் நடந்திருந்தது. ஹஸ்ரத் உம்மே அபான் (ரலி) அவர்களின் கையில் வைக்கப்பட்ட மருதாணியின் நிறமும் தலையில் பூசப்பட்ட நறுமணமும் எஞ்சியிருந்தது. அதாவது, புதிதாக திருமணமாகியிருந்தது. ஜிஹாது செய்வதில் முன்னணியில் இருந்த வீரமிக்க அரேபிய பெண்களைச் சார்ந்தவராக ஹஸ்ரத் உம்மே அபான் (ரலி) அவர்கள் கருதப்பட்டு வந்தார்கள். தமது கணவர் ஷஹீதாகிவிட்ட தகவல் அன்னாருக்கு கிடைத்தபோது, அன்னார் ஓடோடி, தட்டுத் தடுமாறி வந்தார்கள். மேலும், தமது கணவரின் உடலுக்கு அருகில் பொறுமை மற்றும உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியவாறு நின்று கொண்டிருந்தார்கள். தமது நாவால், நன்றிகேடான ஒரு வார்த்தையை கூட கூறவில்லை.

மேலும், தமது கணவரது பிரிவால் சில கவிதைகளை கூறினார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் அன்னாரது ஜனாஸா தொழுகையை தொழவைத்தார்கள். நல்லடக்கத்திற்கு பிறகு, ஹஸ்ரத் உம்மே அபான் (ரலி) அவர்கள் தமது கூடாரத்திற்கு ஓர் உறுதியான எண்ணத்துடன் சென்றார்கள். தமது ஆயுதத்தை ஏந்தினார்கள். மேலும், முகத்தில் துணியைக் கட்டினார்கள். தமது கணவர் ஷஹீதாக்கப்பட்ட தவ்மா வாசலுக்கு சென்றார்கள். தவ்மா வாசலில் தான் அப்போது கடுமையான போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் உம்மே அபான் (ரலி) அவர்கள் அந்த முஸ்லிம்களுடன் இணைந்து கடுமையாக போர் புரிந்து கொண்டிருந்தார்கள். மேலும், தமது அம்புகளால் ஏராளமான ரோமானியர்களை காயப்படுத்தியும், மரணத்தின் குழியில் இறக்கியும் வந்தார்கள். இறுதியில், போரின் போது சந்தர்ப்பம் பார்த்து கைகளில் பெரும் சிலுவையை ஏந்தியிருந்த தவ்மாவின் பாதுகாவலனை குறி வைத்தார்கள்.

அந்த சிலுவை தங்கத்தால் தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும் அதில் விலை உயர்ந்த ஆபரணங்களும் இணைக்கப்பட்டிருந்தன. பெரும் சிலுவையை ஏந்தி நிற்கும் நபர் ரோமானியர்களுக்கு போருக்கான எழுச்சியூட்டிக் கொண்டிருந்தார். சிலுவையின் மூலமாக வெற்றிக்கான துஆவை அவன் வேண்டிக் கொண்டிருந்தான். ஹஸ்ரத் உம்மே அபான் (ரலி) அவர்களின் அம்பு அந்த நபர்

மீது பட்டதும், அவனது கையில் இருந்த சிலுவை கீழே விழுந்துவிட்டது. மேலும் அது முஸ்லிம்களின் கைகளுக்கு வந்துவிட்டது.

சிலுவை முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் சென்றுவிட்டதைக் கண்டபோது, தனது கூட்டாளிகளுடன் அதனை திரும்ப பெறுவதற்காக கீழே இறங்கி வந்தான். மேலும், கதவை திறந்து முஸ்லிம்களுடன் சண்டையிட தொடங்கிவிட்டான். இதற்கிடையில், மேலே இருந்து ரோமானியர்களும் தாக்குதல் நடத்த தொடங்கிவிட்டார்கள்.

அப்போது, சந்தர்ப்பம் பார்த்து ஹஸ்ரத் உம்மே அபான் (ரலி) அவர்கள் தவ்மாவின் கண்களை குறிவைத்து அம்பை எறிந்தார்கள். மேலும் அவனது கண்ணை நிரந்தரமாக குருடாக்கிவிட்டார்கள். அதனால், தவ்மாவிற்கு தனது கூட்டாளிகளுடன் பின்வாங்க நேரிட்டது. அவர்கள் கோட்டையினுள் சென்று கதவை அடைத்துக் கொண்டனர்.

தவ்மாவின் அந்த நிலையைக் கண்டு டமாஸ்கஸ் வாசிகள் கூறினர்: இதனால்தான், இந்த அரேபியர்களுடன் மோதுவது நமது தகுதிக்கு உட்பட்ட விஷயம் இல்லை என்று நாங்கள் கூறினோம். எனவே, அரேபியர்களுடன் சமாதானத்திற்கான ஏதாவது ஒரு நிலையை மேற்கொள்ள வேண்டும்.

அதற்கு, தவ்மா மேலும் சினம் கொண்டுவிட்டான். மேலும், தனது கூட்டாளிகளிடம் கூறினான்: நான் எனது கண்ணிற்கு பகரமாக, அவர்களின் ஓராயிரம் கண்களை குருடாக்கிவிடுவேன். (அப்துஸ் ஸத்தார் ஹம்தானி அவர்களின் நூல்-மர்தானே அரபு பாகம் 1, பக்கம் 248-254, அக்பர் புக்செல்லர்ஸ் லாஹூர்)

டமாஸ்கஸ் வாசிகளுக்கு ஹிம்ஸிலிருந்து 20ஆயிரம் படை வீரர்கள் உதவிக்காக வருவர் என்ற நம்பிக்கை இருந்தது. (அலி முஹம்மது அஸ்ஸலாபி அவர்களின் நூல்-ஸய்யிதுனா உமர் பின் கத்தாப் (ரலி), பக்கம் 724)

ஆனால், இஸ்லாமியப் படை இவ்வாறு திட்டம் வகுத்தது. அதாவது, படையின் ஒருப் பிரிவை டமாஸ்களின் ஒரு வழிப்பாதையில் அமர்த்திவிட்டார்கள். இவ்வாறு, ஹிம்ஸிலிருந்து வரக்கூடிய படை அங்கேயே தடுத்து நிறுத்தப்பட்டது. முஸ்லிம்கள் டமாஸ்கஸ் முற்றுகையை கடுமையாக்கிவிட்டார்கள். மேலும், எதிரிகள் மீது தாக்குதல்கள் நடத்தியும், அம்புகள் எய்தும் மிகவும் துன்பத்திற்கு ஆளாக்கி வந்தார்கள். இனி நமக்கு உதவி கிடைக்காது என்று டமாஸ்கஸ் வாசிகளுக்கு உறுதி ஏற்பட்டுவிட்ட பிறகு, அவர்களிடம் பலவீனமும் கோழைத்தனமும் உருவாகிவிட்டது. அப்போது, தொடந்து போராடும் முயற்சியை கைவிட்டுவிட்டார்கள். மேலும், அவர்களை வீழ்த்துவதற்கான உணர்வு முஸ்லிம்களின் உள்ளங்களில் அதிகரித்து விட்டது.

(தாரீகுத் தபரி தொகுதி 2, பக்கம் 357-358, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

கடும் குளிரில் முஸ்லிம்கள் நீண்ட காலம் முற்றுகையின் துன்பங்களை தாங்கிக் கொள்ள மாட்டார்கள் என்பது டமாஸ்கஸ் வாசிகளின் எண்ணமாக இருந்தது. ஆனால், முஸ்லிம்கள் நிலைமைகளை மிகவும் வீரத்துடன் எதிர்கொண்டார்கள். டமாஸ்கஸை சுற்றியிருந்த வெறுமையான கட்டடங்களை முஸ்லிம்கள் ஓய்வு எடுப்பதற்காக பயன்படுத்திக் கொண்டார்கள். வாரம், வாரம், ஒரு முறையான ஏற்பாட்டின் கீழ் பாதுகாப்பு பணியில் இருக்கும் படையினர் ஒவ்வொரு குழுவாக வந்து ஓய்வு எடுப்பார்கள். அவர்கள் சென்றுவிட்ட பிறகு, அடுத்த படைக் குழு வந்து ஓய்வெடுக்கும். வாசல்களில் பணியமர்த்தப்பட்ட அந்தப் படைப் பிரிவிற்குப் பின்னால், அவர்களின் உதவிக்காகவும், கண்காணிப்பிற்காகவும் மற்றொரு படை நியமிக்கபட்டிருந்தது. இவ்வாறு நீண்ட நெடிய முற்றுகையின் மீது ஆதிக்கம் செலுத்துவது எளிதாகிவிட்டது. ஆனால், முஸ்லிம்கள் இத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை. மாறாக, எதிரியின் முறையாக தடைகளை உடைப்பதற்காக அவர்களின் கள ஆராய்ச்சிகளும், போர் திட்டங்களும் தமது பணியை செய்து கொண்டிருந்தன.

இந்த தொடர் தடைகள் மற்றும் நெடுந்தொடருக்கு மத்தியில் டமாஸ்களினுள் எங்கிருந்து எளிதாக நுழைவது சாத்தியமானதாக இருந்ததோ அந்த இடத்தை தேர்ந்தெடுப்பதில் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் வெற்றியடைந்துவிட்டார்கள். அது டமாஸ்களின் மிகச் சிறந்த பாதையாக இருந்தது. அந்த இடத்தில் அகழின் தண்ணீர் மிகவும் ஆழமாக இருந்தது. மேலும், அங்கிருந்து நுழைவது மிகவும் கடினமானதாக இருந்தது. ஹஸ்ரத் காலித் பின் வலீத் ரலி அவர்கள் டமாஸ்களினுள் நுழைவதற்கு இந்த திட்டத்தை வகுத்தார்கள். அதாவது, கோட்டையின் மதில் சுவரில் ஏறுவதற்கும், டமாஸ்களினுள் நுழைவதற்கும் சில கயிறுகளை ஒன்று சேர்த்து அதில் முடிச்சுகளை போட்டு ஏணிப்படிகளை போன்று பயன்படுத்த முயன்றார்கள். இதற்கிடையில், ரோமானியப் படையின் பத்தாயிரம் வீரர்களின் தலைவருக்கு குழந்தை பிறந்திருப்பதாக ஒருவர் மூலமாக ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு தகவல் கிடைத்தது. ஒரு படைத்தளபதிக்கு குழந்தை பிறந்திருந்தது. எல்லா மக்களும், அதில் பாதுகாப்பு போர் வீரரும் அடங்குவார். விருந்தில் மும்முரமாக இருந்தார்கள். ஆக, அவர்கள் அனைவரும் உண்டு, பருகி மெய் மறந்து உறங்கிவிட்டனர். மேலும், தமது பொறுப்புகளிலிருந்து கவனமற்றவர்களாக ஆகிவிட்டனர்.

இதற்கிடையில், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் தமது சில தோழர்களுடன் தோல்பைகளைக் கொண்டு அகழைக் கடந்து மதில் சுவரை வந்தடைந்தார்கள். கயிறுகளில் முடிச்சுகளைப் போட்டு அதனை ஏணியாக மாற்றி மதில் சுவரில் உறுதியுடன் கட்டிவிட்டார்கள். மேலும், பல்வேறு கயிறுகளை மதில் சுவரில் தொங்கவிட்டு விட்டார்கள். அதில் கயிறுகளின் துணை கொண்டு, ஏராளமான முஸ்லிம்கள் கோட்டையின் மதில் சுவரில் ஏறிவிட்டார்கள். மேலும் இறங்கிவிட்டார்கள். மேலும், கதவுகளை சென்றடைந்துவிட்டார்கள். கதவுகளின் பூட்டுகளை வாள்களால் உடைத்து விலக்கிவிட்டார்கள். இவ்வாறு இஸ்லாமியப் படை டமாஸ்களினுள் நுழைந்துவிட்டது.

அலி முஹம்மது அஸ்ஸலாபி அவர்களின் நூல்-பக்கம் 727-728, மக்தபா அல்ஃபுர்கான் முஸஃபர் கட்

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் படை கிழக்கு வாசலைக் கைப்பற்றிவிட்டது. அப்போது ரோமானியர்கள் பதற்றமடைந்து ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களிடம் மேற்கு வாசலில் சமாதானம் செய்து கொள்வதற்கு கோரிக்கை வைத்தனர். உண்மையில், முஸ்லிம்கள் முன்வைத்த சமாதான கோரிக்கையை அவர்கள் முன்னர் நிராகரித்திருந்தனர். மேலும், போர் புரிவதற்கு பிடிவாதம் பிடித்தனர். ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் மனமகிழ்ச்சியுடன் சமாதானத்தை ஏற்றுக் கொண்டார்கள். அப்போது, ரோமானியர்கள் கோட்டையின் வாசல்களை திறந்துவிட்டனர். மேலும், விரைந்து வாருங்கள். எங்களை இந்த வாசலிலிருந்து தாக்குதல் நடத்துபவர்களிடமிருந்து (அதாவது, ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடமிருந்து) காப்பாற்றுங்கள் என்று முஸ்லிம்களிடம் கூறினர்.

இதன் விளைவு என்னவாயிற்று என்றால், எல்லா வாசல்கள் வழியாகவும் முஸ்லிம்கள் சமாதானத்துடன் நகரத்திற்குள் நுழைந்துவிட்டனர். மேலும், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தமது வாசல் வழியாக போர் புரிந்தவாறு நகரத்திற்குள் நுழைந்துவிட்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களும், மற்ற இஸ்லாமிய அமீர்மார்களும், நகரத்தின் மையப் பகுதியில் ஒருவர் மற்றவருடன் சந்தித்துக் கொண்டனர். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் டமாஸ்களின் சில பகுதிகளை போர் புரிந்து வெற்றிக் கொண்டிருந்தார்கள் என்றபோதிலும், ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் சமாதானத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள் எனவே வெற்றிக் கொள்ளப்பட்ட பகுதிகளிலும் சமாதான உடன்படிக்கைக்கான நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

தாரீகே தபரி தொகுதி 2, பக்கம்

357-358, தாருல் குதுபில் இல்மியா,பெய்ரூத் 2012

இங்கு ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதாவது, டமாஸ்கஸ் வெற்றியை சில வரலாற்று ஆசிரியர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் நிகழ்ந்ததாக எடுத்துரைக்கின்றனர். ஆனால், டமாஸ்கஸ் போர் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்திலேயே தொடங்கியிருந்தது. ஆயினும், வெற்றியின் செய்தி மதீனாவை வந்தடைந்தபோது அந்நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் மரணம் நிகழ்ந்துவிட்டது. ஆக, இது ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த கடைசிப் போராக இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வாழ்க்கையின் மற்ற அம்சங்கள் எதிர்வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும்.

தற்போது, நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைக்க விரும்புகிறேன். முதலாவது நற்குறிப்பு, பாலஸ்தீனத்தின் சத்ர் ஜமாஅத்தாக இருந்த மதிப்பிற்குரிய அபூ அர்கூப் சாஹிப் அவர்களுடையதாகும். ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி 70வது வயதில் மரணமடைந்துவிட்டார்கள்.

اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡنَ

அபூ அர்கூப் சாஹிப் 2010ம் ஆண்டு MTA அல் அரபிய்யா மூலமாக ஜமாஅத்தைக் குறித்து அறிந்து கொண்டார்கள்.

இது தொடர்பாக அன்னார் கூறினார்கள்;

நான் முதன் முதலில் MTA பார்த்தபோது, நிச்சயமாக இந்த மக்கள் நல்ல மக்கள் ஆவர் என்பதை உணர்ந்து கொண்டேன். ஒரு பக்கம் இஸ்லாமிய உலகம் கொலை, கொள்ளை, திருட்டு, பரஸ்பர பகைமை ஆகியவற்றின் நிலையில் காண்கிறேன். மற்றொரு பக்கம் அஹ்மதிய்யா ஜமாஅத் நன்மைக்கான போதனையை வழங்குகின்றது. தஹஜ்ஜுத் தொழுவதற்கும், திருக்குர்ஆன் ஓதுவதற்கும் அறிவுறுத்துகின்றது. அதன் காரணமாக நான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகினேன். இதுவே உண்மையான ஜமாஅத் ஆகும். இதனை பின்பற்றுவது நம் மீது கடமையாகும் என்று கூறினார்கள்.

அடுத்து கூறுகின்றார்கள்; இஸ்திகாரா செய்த பிறகு, எனக்கு உறுதி ஏற்பட்டுவிட்டது. பின்னர், இந்த ஜமாஅத்துதான் உண்மையானது என்று கனவு ஒன்றையும் நான் கண்டேன்.

பின்னர் அன்னார் கூறுகின்றார்கள்; நான் மரணம் வரை இந்த ஜமாஅத்துடன் தொடர்புடையவனாக இருப்பேன் என்று நான் உறுதிமொழி எடுத்துக் கொண்டேன்.

எல்லா கடினமான தருணங்களிலும் மர்ஹூம் மிகவும் உறுதிப்பாட்டுடன் திகழ்ந்தார்கள். நான் உயிருடன் இருக்கும் வரை உறுதிப்பாட்டுடன் இருப்பேன் என்று மர்ஹூம் கூறிவந்தார்கள். அன்னாரின் பைஅத்திற்கு பிறகு, அன்னாரின் மனைவி கனவில் இவ்வாறு கண்டார்கள். அதாவது, சில அஹ்மதிகள் உள்ளனர். மதிப்பிற்குரிய உமர் சாஹிபை தமது வீட்டின் ஓர் அறையில் அழைத்து சென்றனர். அவர்கள் அவரை நீராட்டினர். மேலும், அன்னாரின் நெஞ்சை திறந்து அதனை சுத்தம் செய்தார்கள். பின்னர், பாருங்கள்! நாங்கள் இவரை சிறந்த நிலையில் திரும்ப அழைத்து வந்துள்ளோம் என்று என்னிடம் கூறினர்.

கிலாஃபத்தின் மீது எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார்கள். மிகவும் துஆக்கள் செய்து வந்தார்கள். மர்ஹூம் ஜமாஅத்துடன் கலப்பற்ற தொடர்பு வைத்திருந்தார்கள். தமது வீட்டின் கீழ்பகுதியின் ஒரு பகுதியை ஜமாஅத்திற்காக அர்பணித்துவிட்டார்கள். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தெற்கு பாலஸ்தீனம் மர்ஹூமின் வீட்டில் தொழுகை, ஜுமுஆ, பெருநாள் தொழுகைகள், கூட்டங்கள் போன்றவற்றிற்காக ஒன்றுகூடி வந்தது.

அன்னாரின் மகன் கூறினார்:

வீட்டின் இந்தப் பகுதி ஜமாஅத்திற்கானதாகவே இருக்கும் என்பது மர்ஹூமின் வஸிய்யத் ஆகும். மர்ஹூமின் எதிரிகள், அன்னார் நோய்வாய்பட்ட நாட்களில் நீங்கள் இந்த ஜமாஅத்திலிருந்து தவ்பா செய்து விடு நோய் நீங்கிவிடும் என்று கூறினர். ஆனால், மர்ஹூம் அதன் பின்னரும் அவர்களுடன் தப்லீக் விவாதங்கள் செய்து வந்தார்கள். மிகவும் அதிகமாக முந்திக் கொண்டு ஜமாஅத்தின் எதிர்ப்பில் பேசி வந்த ஒருவருடன் அன்னார் விவாதம் செய்தார்கள். அவர் எந்த பதிலும் தரமுடியாத அளவில் அவருக்கு மர்ஹூம் பதில் கொடுத்தார்கள். அன்னார் நோயின் நாட்களை கடந்து கொண்டிருந்தபோது, நோயின் தீவிரத்தின் காரணமாக அடுத்த நாள் மர்ஹூமை தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்க நேரிட்டது. விவாதத்தின் போது, மிகவும் அதிகமாக தர்க்கம் செய்து கொண்டிருந்த அந்த முல்லாவிடம், தந்தையை விட்டுவிடு. இவர் அனுபவம் மிக்கவர். உம்மால் அவரை ஏற்றுக் கொள்ள வைக்க முடியாது என்று மர்ஹூமின் மகன் கூறினார்.

எவ்வாறு இருப்பினும், மகன் கூறுகின்றார்: மர்ஹூம் மரண படுக்கையில், எங்களுக்கு இவ்வாறு அறிவுரை வழங்கினார். அதாவது எனது மரணத்தால் வேதனை அடைய வேண்டாம். பின்னர், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் இந்தக் கூற்றை திரும்ப திரும்பக் கூறிக் கொண்டே இருந்தார்கள்.

غَدًا أَلْقَى الْأَحِبَّةَ مُحَمَّدًا وَصَحْبَهُ

பொருள்: அதாவது நாளை நான் எனது அன்பிற்குரிய முஹம்மது (ஸல்) அவர்களையும், சஹாபிகளையும் சந்திப்பேன். (ஷரஹுஸ் ஸர்கானி அலல் மவாஹிபுத் துனியா தொகுதி 1, பக்கம் 1499, இஸ்லாமே ஹம்ஸா, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 1996)

மர்ஹூம் அனைவரின் அன்பையும் பெற்றிருந்தார்கள். மேலும் ஒரு அன்பான நபராக இருந்தார்கள். மர்ஹூமிற்கு மனைவியும், மூன்று மகன்களும், நான்கு மகள்களும் உள்ளனர். அல்லாஹ் அஹ்மதி அல்லாத அன்னாரின் பிள்ளைகளுக்கும் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதற்கான நற்பேறை வழங்குவானாக. மேலும், மர்ஹூமின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

இரண்டாவது நற்குறிப்பு, மதிப்புற்குரிய ஷேக் நாஸிர் அஹ்மது சாஹிப் மிட்டி துர்பார்கருடையதாகும். அன்னார் கடந்த நாட்களில், 93வது வயதில் மரணமடைந்துவிட்டார்கள்.

اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡنَ

மிட்டியின் முதல் அஹ்மதியாக இருந்தார்கள். 1969-ல் அன்னார் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டார்கள். ஓர் உணர்வு மிக்க இறைவன் பால் மக்களை அழைக்கக் கூடிய மற்றும் மார்க்க தன்மானம் கொண்ட அஹ்மதியாக இருந்தார்கள். ஐவேளை தொழுகையை பேணுதல், விருந்து உபசரிப்பு செய்தல், கிலாஃபத்தின் மீது உளப்பூர்வமான அன்பு போன்ற பண்புகள் அன்னாரிடம் மிகவும் தெளிவானதாக இருந்தன. மிட்டியிலும், அதனை சுற்றியுள்ள ஊர்களிலும் பல்வேறு பைஅத்துகளை செய்ய வைப்பதற்கு அன்னாருக்கு நற்பேறு கிடைத்தது. அன்னார் கொடுத்த இடத்திலேயே மிட்டியின் முதல் பள்ளிவாசல் கட்டப்பட்டது. குடும்பம் மற்றும் சகோதரர்கள் புறமிருந்து அன்னாருக்கு கடும் எதிர்ப்பை சந்திக்க நேரிட்டது. குறிப்பாக, பிள்ளைகளின் திருமணத்திற்கான காலம் வந்தபோது, தமது குடும்பத்திற்கு வெளியில் அஹ்மதிகளுடன் திருமணம் செய்வதிலிருந்து தடுப்பதற்கு மர்ஹூமின் சகோதரர்கள் மிகவும் கடுமையான அழுத்தம் கொடுத்தனர். அன்னாரை புறக்கணித்தனர். அவர்கள் திருமணத்தில் கலந்து கொள்ளவில்லை. ஆனால், அல்லாஹ்வின் சிறப்பான அருளால், மர்ஹூம் தமது அனைத்து பிள்ளைகளின் திருமணத்தையும் அஹ்மதி குடும்பத்திலேயே செய்து வைத்தார்கள். அன்னார் தமது பிள்ளைகளின் தர்பிய்யத்தின் பக்கம் சிறப்புக் கவனம் செலுத்தினார்கள். அனைவருக்கும் திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்தார்கள். தொழுகையை பேண வைக்கச் செய்தார்கள். முன்னர் இந்துவாக இருந்த தமது பெண்களை அவர்களின் பாரம்பரிய வழிமுறையிலான உடைகளை அணிவதிலிருந்து விலக்கி அவர்கள் புர்கா அணிவதற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஒரு முறை அன்னாரை பாராட்டியவாறு

கூறியிருந்தார்கள்: எல்லா சென்டர்களிலும் ஒரு நாஸிரை நாம் உருவாக்கிவிட்டால், பின்னர் நாம் நிச்சயம் வெற்றி பெற்றுவிடுவோம்.

அன்னார் பின்விட்டுச் சென்றவர்களில், இரண்டு மகன்களும் நான்கு மகள்களும் அடங்குவர். அன்னாரின் சில பிள்ளைகளும் வாழ்க்கையை அர்பணித்தவர்களாக உள்ளனர். அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

மூன்றாவது நற்குறிப்பு மலிக் சுல்தான் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். அன்னாரும் கடந்த நாட்களில் 84-வயதில் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

1938-ல் ஜங்க் மாவட்டம் பகான்ஸ்வா ஊரில் பிறந்தார்கள். பிறப்பால் அஹ்மதியாக இருந்தார்கள். அன்னாரின் குடும்பத்தில் அன்னாரது தந்தை மதிப்பிற்குரிய ஸஜாதஃ சாஹிபுல் மஃரூஃப் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. அன்னார் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் காலத்தில் நேரில் காதியான் சென்று பைஅத் செய்திருந்தார்கள். அன்னார் மிடில் வகுப்புகள் வரை கல்வி பயின்ற பிறகு, 1960ல் வக்ஃபே ஜதீதின் கீழ் தொண்டாற்றுவதற்கு விண்ணப்பித்தார்கள். அன்னாரின் வக்ஃப் ஒப்புக் கொள்ளப்பட்டது.

பின்னர், ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) வக்ஃபே ஜதீதின் பொறுப்பாளராக ஆன போது மர்ஹூம் அன்னாரின் தர்பிய்யத்தின் கீழ் இருந்தார்கள். மேலும், சில காலம் அங்கிருந்து தர்பிய்யத் பெற்று, பின்னர் 1960-ல் முஅல்லிமாக மர்ஹூமின் பணி நியமனம் நிகழ்ந்தது. துர்பார்கர் பகுதியில் அன்னார் அனுப்பப்பட்டார்கள். அங்கு அன்னார் பெரும் பணியாற்றினார்கள். பின்னர், பாகிஸ்தானின் மற்றப் பகுதிகளிலும் பணி செய்துள்ளார்கள். அன்னார் 38 ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் தொண்டாற்றியுள்ளார்கள். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை மிகவும் மகிழ்ச்சிகரமான முறையில் நிறைவேற்றி வந்துள்ளார்கள். தப்லீக்கில் மிகுந்த ஆர்வம் இருந்தது.

அதன் காரணமாகவே அன்னாரின் மீது கொலை வெறித் தாக்குதலும் நடைபெற்றிருந்தது. உண்மை, சமூகத் தன்மை, விருந்து உபசரிப்பு, இனிமையாக பழகுதல் போன்றவை அன்னாரின் அடிப்படை குணங்களாக இருந்தன. தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும், ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுவதை பேணக்கூடியவராகவும், துஆ செய்யக் கூடிய நபராகவும் இருந்தார். மரணிக்கும் தருணம் வரை கிலாஃபத் அமைப்புடன் நன்றியுணர்வு மிக்க தொடர்பு வைத்திருந்தார். மேலும் தமது சந்ததிகளுக்கும் அவ்வாறு செய்வதற்கு வலியுறுத்தி வந்தார்கள். அன்னார் விட்டுச் சென்றவர்களில், மனைவி மட்டுமின்றி, மூன்று மகன்களும், இரண்டு மகள்களும் அடங்குவர். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

அடுத்த நற்குறிப்பு, பஹாவுத்தீன் மாவட்டம் ஸஅதுல்லாஹ்பூரில் வசித்து வந்த மதிப்பிற்குரிய மஹ்பூப் அஹ்மது ராஜீகி சாஹிப் அவர்களுடையதாகும். இவரும் கடந்த நாட்களில் 86வது வயதில் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் இரண்டு மகன்களும், ஒரு மகளும் அடங்குவர். ஒரு மகன் வெளியில் ஜெர்மனியில் இருக்கின்றார். மேலும் சிலர் லாஹூரில் உள்ளனர். மர்ஹூம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் குலாம் அலி சாஹிப் ராஜீகி (ரலி) அவர்களின் மகனும், ஹஸ்ரத் மவ்லவி குலாம் ரஸூல் சாஹிப் ராஜீகி (ரலி) அவர்களின் அண்ணன் மகனும் ஆவார்கள். மேலும், ஹஸ்ரத் மவ்லவி கவ்ஸ் முஹம்மது சாஹிப் (ரலி) அவர்களின் மகள் வழி பேரனும் ஆவார்கள்.

மர்ஹூமின் மகன் மப்ரூர் சாஹிப் கூறுகின்றார்கள்:

மர்ஹூமிற்கு 37ஆண்டுகள் சஅதுல்லாஹ்பூரின் ஜமாஅத் தலைவராக தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது. மிகவும் துஆ செய்யக்கூடியவராகவும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மீது உண்மையான பற்றுக் கொண்டவராகவும், கிலாஃபத்தின் மீது எல்லையற்ற அன்பு கொண்டவராகவும், மிகவும் தைரியசாலியாகவும், ஜமாஅத்தின் தொண்டராகவும் இருந்தார்கள். முப்பது முறை அன்னாருக்கு இறை வழி கைதியாக இருப்பதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. ஐவேளை தொழுகைகளை முறையாக நிறைவேற்றி வந்ததுடன் நீண்ட நேரம் தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும் இருந்தார்கள். எண்ணற்ற சந்தர்ப்பங்களில் இறைவன் அன்னாரின் துஆக்களை உடனடியாக ஒப்புக் கொண்டுள்ளான். நல்ல கனவுகளையும், ஆன்மீகக் காட்சிகளையும் பார்க்கக் கூடியவராகவும் இருந்தார்கள். சிறை வாசத்தின் போதும், இன்ன நாளில் விடுதலை நடக்கும் அல்லது இன்ன நேரத்தில் இன்ன சம்பவம் நடக்கும் என்று பல முறை கனவுகள் வந்து கொண்டிருந்தன. பின்னர் அதேபோன்றே நடைபெற்றும் வந்தது. பகலில் அதிகமாக தரூது ஓதுவதிலும், துஆக்கள் செய்வதிலும் மும்முரமாக இருப்பார்கள். இன்னும் கூறப்போனால், ஒரு நபர் எழுதியுள்ளார்:

ஒருநாள் ஃபஜ்ர் தொழுகைக்காக அன்னார் வந்தார்கள். அப்போது, அன்னாரின் மீது அவர் கை வைத்தபோது அன்னாருக்கு கடுமையான காய்ச்சல் இருந்தது. ஆனால், அவ்வாறிருந்தும் ஜமாஅத்தாக தொழுவதற்கு பள்ளிவாசலுக்கு வந்திருந்தார்கள். மேலும், MTA மற்றும் கிலாஃபத்தின் மீதான நேசத்தின் நிலை இவ்வாறு இருந்தது. அதாவது மிகவும் சப்தமாக கேட்டு வந்தார்கள். புரியவில்லையென்றாலும் குத்பாவின்போது டிவிக்கு முன்னால் அமர்ந்து நிச்சயம் கேட்பதற்கு முயற்சி செய்து வந்தார்கள். அன்னாரின் மரணத்திற்கு பிறகு, அக்கம் பக்கத்திலுள்ள கிராமங்களில் இருந்து ஏராளமான அஹ்மதி அல்லாத நபர்கள் வந்திருந்தனர். இன்னும் கூறப்போனால், அதற்கு முன்னரும் வந்து சென்றனர். அன்னார் மீது மிகுந்த நம்பிக்கை இருந்தது. அன்னாரிடம் துஆவிற்காக கூறிவந்தனர். மரணத்திற்கு பிறகு, இரங்கல் தெரிவிக்கவே வந்திருந்தனர். துஆக்களுக்காகவும் அன்னாரிடம் அவர்கள் கூறிவந்தனர். அன்னார் அஹ்மதியாக மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான முரீத்கள் அன்னாருக்கு இருந்திருப்பார்கள் என்று மக்கள் கூறிவந்தனர். மேலும் அன்னாரின் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்டதற்கான பல சம்பவங்களை அஹ்மதி அல்லாத பலரும் எடுத்துக் கூறியுள்ளனர். மேலும், உதாரணங்களும் வழங்கியுள்ளனர்.

அல்லாஹ் அன்னாருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

இன்ஷா அல்லாஹ் தொழுகைகளுக்கு பிறகு, இவர்கள் அனைவரின் ஜனாஸா தொழுகைகளும் தொழப்படும்.

தமிழாக்கம் :

மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM

JAYGON-WEST BENGAL 97348 44732

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 06 October 2022 Issue No. 40

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## மல்ஃபூஸாத் - முதல் பக்கத் தொடர்ச்சி...

இருப்பார். மேலும் உட்பூசல்களை நீக்கி, முஸ்லிம்களை ஹிதாயத்திற்கான உண்மையான வழியில் நிலை நிறுத்துவார். எனவே அவர் மஹ்தி என்றழைக்கப்படுவார்.

இந்த நற்செய்தியைக் குறித்து وَاٰخَرِيْنَ مِنْهُمْ (மேலும் இதுவரை, அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் அவரை எழுப்புவான். (62:4)) என்ற வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதேநேரம் அவை இரண்டு குழப்பங்களாக இருக்கும். அந்த குழப்பங்களின் அடிப்படை இரண்டு அசுத்தமான விஷயங்களின் மீது இருக்கும்.ஒரு பிரிவு இருக்கும். அது அத் தஜ்ஜால் என்றழைக்கப்படும். மற்றொன்று யாஃஜூஜ் மஃஜூஜ் என்றழைக்கப்படும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 401, காதியான் பதிப்பு 2018)

## தஃப்ஸீரே கபீர் - முதல் பக்கத் தொடர்ச்சி...

அதுவாகவே இருந்தது. அதில் வருகிறது.

اَنَّهٗ سُئِلَ عَنْ اُكُلِ الْقَنْفُذِ فَتَلَا قُلْ لَّآ اَجِدُ فِيْ مَآ اُوْحِيَ اِلَيَّ الْآيَة

(சுனன் அபூதாவூத் பாகம் 3, கிதாபுல் அத்இமாஃ)

மேலும், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்தும் இப்னு அபீ ஹாதிம் மற்றும் வேறு சில நபர்களும் சான்றுடன் அறிவித்துள்ளார்கள்.

اِنَّهَا كَانَتْ اِذَا سُئِلَتْ عَنْ اَكْلِ كُلِّ ذِيْ نَابٍ مِنَ السِّبَاعِ وَ مُخْلَبٍ مِنَ الطَّيْرِ قَالَتْ قُلْ لَّآ اَجِدُ فِيْ مَآ اُوْحِيَ اِلَيَّ الْآيَة

இதேபோன்று, இப்னு அபீ ஹாதிம் அவர்கள் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடமிருந்தும் அறிவிக்கின்றார்கள்.

قَالَ لَيْسَ مِنَ الدَّوَابِّ شَيْءٌ حَرَامٌ اِلَّا مَا حَرَّمَ اللّٰهُ تَعَالٰى فِيْ كِتَابِهٖ قُلْ لَّآ اَجِدُ

இமாம் மாலிகின் கருத்தும் இதுவாகவே இருந்தது. (ரூஹுல் மஆனி தொகுதி 8, அதிகாரம் அன்ஆம் மேற்கண்ட வசனத்தின் விளக்கத்தின் கீழ்)

தற்போது எழும் கேள்வி (இவை அல்லாத) மற்ற பொருட்களை உண்பது ஆகுமானதா? என்பதாகும். ஆனால், எனது பார்வையில் சில பொருட்களை உண்பது ஆகுமற்றதாகும். இருந்தபோதிலும் அவற்றை ஷரீஅத்தின் சொல் வழக்கில் நம்மால் ஹராம் என்று கூறமுடியாது.

இப்னு மாஜாவில் ஸல்மான் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:

اَلْحَلَالُ مَآ اَحَلَّ اللّٰهُ فِيْ كِتَابِهٖ وَ الْحَرامُ مَا حَرَّمَ اللّٰهُ فِيْ كِتَابِهٖ

(இப்னு கஸீர் தொகுதி 1, சூரா பக்ராவின் மேற்கண்ட வசனத்தின் விளக்கவுரையில் கீழ் வரும் குறிப்பு)

இதிலிருந்து, இறைவன் எந்த பொருட்களை ஹலால் ஆக்கியுள்ளானோ அவற்றையே நம்மால் ஹலால் என்று கூறமுடியும். மேலும் எவற்றை ஹராம் என்று கூறியுள்ளானோ, அவற்றையே நம்மால் ஹராம் என்று கூறமுடியும். மற்ற பொருட்களைப் பொருத்தவரை அவை ஹலால் மற்றும் ஹராம் கட்டளைகளின் கீழ் வரும். சூரா அல்மாயிதாவிலும் இந்த உண்மைத்துவத்தின் பக்கமே சைகையாக கவனமூட்டப்பட்டுள்ளது.

அதில் அல்லாஹ் கூறுகின்றான்:

பொருள்: உங்களுக்குக் (குர்ஆனில்) அறிவிக்கப்படுபவை நீங்கலாக, நாற்கால் விலங்குகள் உங்களுக்கு அனுமதிக்கப்படுகின்றன.

அன்ஆம் (கால்நடைகள்) பல வகைகள் உள்ளன. ஒட்டகம், ஆடு, பசு, இவை ஹலால் ஆகும்.

இதன் பிறகு, அல்லாஹ் கூறுகின்றான்:

பொருள்: தானாகச் செத்ததும், இரத்தமும், பன்றி இறைச்சியும், அல்லாஹ் அல்லாத (வேறொருவரின் அல்லது வேறொன்றின்) பெயர் கூறப்பட்டதும்.)

அதாவது, இந்த ஹலாலான பொருட்களுக்கு எதிரில், சிலவை ஹராம் ஆகும். முதலாவதாக, ஹலாலான விலங்குகளாகவே இருந்தாலும் அவை மரணித்தவை என்றால் ஹராம் ஆகும். இரண்டு, ஹலாலான விலங்குகளாகவே இருந்தாலும் அவற்றின் இரத்தம் ஹராம் ஆகும். மூன்று, பன்றி இறைச்சி, நான்கு, ஹலால் ஆன விலங்குகளாகவே இருந்தாலும் கூட அல்லாஹ் அல்லாதவற்றின் பெயர் அதில் கூறப்பட்டிருந்தால் அவை ஹராம் ஆகும்.

அடுத்து, செத்தவை, இரத்தம் ஆகியவற்றின் விளக்கம் மேலும் விரிவாக கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்:

نَطِيْحَة مَوْقُوْذَة (கொம்பால் குத்தப்பட்டுச் செத்தது, அடிபட்டுச் செத்தது) போன்றவையும் ஹராம் ஆகும். இவை புதிதாக ஹராம் ஆக்கப்பட்டவை அல்ல. மாறாக, மய்தா (செத்தவை) மற்றும் தமுன் (இரத்தம்) ஆகியவற்றின் விளக்கவுரை ஆகும். இவை அனைத்தையும் எடுத்துரைத்துவிட்டு பின்னர் இறைவன் கூறுகின்றான்:

يَسْـَٔلُوْنَكَ مَاذَآ اُحِلَّ لَهُمْ

பொருள் : எங்களுக்கு எவை எவை ஹலால் ஆகும் என்று முஸ்லிம்கள் வினவுகின்றனர். தற்போது

اِنَّمَا حَرَّمَ عَلَيْكُمُ

என்பதற்கு இவற்றைத் தவிர மற்ற அனைத்து பொருட்களை உண்பது ஆகுமானதாகும் என்பது பொருள் என்றால், பின்னர் திருக்குர்ஆன் இந்த நான்கு பொருட்களை அந்த கேள்விக்கு முன்னரே எடுத்துரைத்துவிட்டது. அவ்வாறிருக்க, அந்த கேள்வி மீண்டும் ஏன் கேட்கப்படுகிறது?

ஹலால் மற்றும் ஹராமான பொருட்களை எடுத்துரைத்த பிறகு பின்னர் மீண்டும் அந்தக் கேள்வி கேட்கப்படுவதும், அதற்கு பதில் அளிப்பதும் கூறுவது என்னவென்றால், முந்தைய ஹலாலான பொருட்களின் விளக்கத்தில் சில திரை இன்னும் எஞ்சியிருக்கின்றது.அது தொடர்பாகவே சஹாபிகள் கேள்வி கேட்டனர். மேலும், அல்லாஹ்வும் அவர்களின் கேள்விக்கு, தற்போது நாம் எடுத்துரைத்துவிட்டோமே. பின்னர் ஏன் கேட்கின்றீர்கள்? என்று பதில் அளிக்கவில்லை. மாறாக, கேள்வியின் தேவையை ஏற்றுக் கொண்டு அதற்கு பதில் அளித்துள்ளான். அந்த பதில் இவ்வாறாகும். மற்ற பொருட்களில் தூய்மையானவை ஹலால் ஆகும். எவை தூய்மையாவை இல்லையோ அவை ஹலால் கிடையாது.

இதிலிருந்து எல்லா ஹலாலான பொருட்களும் தூய்மையானவை கிடையாது என்பது தெரிய வருகின்றது. தூய்மையானவைகளை மட்டும் உண்பதே ஆகுமானதாகும். மற்றவற்றை உண்பது ஆகுமானதல்ல. ஆயினும், அதற்கு ஹராம் என பெயர் சூட்ட முடியாது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் இந்தக் கருத்தை எடுத்துரைத்துள்ளார்கள். ஒரு ஹதீஸில் வருகிறது.

اِنَّ الْحَلَالَ بَيِّنٌ وَ الْحَرامَ بَيِّنٌ وَ بَيْنَهُمَا اُمُوْرٌ مُشْتَبِهَاتٌ لَا يَعْلَمُهَا كَثِيْرٌ مِنَ النَّاسِ

(புகாரி தொகுதி 2, பாடம் வியாபாரம், பாபுல் ஹலால் பய்யன் வல் ஹராம் பய்யன்)


பொருள்: ஹலாலும் எடுத்துரைக்கப்பட்டுவிட்டன. ஹராமும் எடுத்துரைக்கப்பட்டுவிட்டன. பின்னர் அந்த இரண்டிற்கும் மத்தியில் சந்தேகத்திற்குரிய விவகாரங்களும் உள்ளன. அதனை பெரும்பாலான மக்கள் அறிவதில்லை. எனவே, அது தொடர்பாக அனுமானம், மருத்துவ அறிவு மற்றும் அனுபவம் ஆகியவற்றை பயன்படுத்தி முடிவு எடுத்துக் கொள்ளப்படும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4, பக்கம் 260, காதியான் பதிப்பு 2010)

* * * * *

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad